விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை (09.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 21

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.R 021 2227318
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## நியமனக் கடிதங்களை கல்வி வலயத்தில் பெறுக

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலயக்கல்வி அலுவலகங்களில் நியமனக் கடிதங்களைப்பெற்று கடமைகளைப் பொறுபேற்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியர் நியமனம்பெறும் யாழ். மாவட்ட பட்டதாரிகள் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்கு நாளை காலை சென்று நியமனக்கடிதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அதேபோன்று கிளிநொச்சி முல்லைத்தீவு, துணுக்காய் வல (14 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம்களுக்குப் பொறுப்பாக இராணுவத்தை நியமிப்பது மகா தவறு

### வாசுதேவ நாணயக்கார யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்வையிடுவதும் நலன்புரி நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிபுரிவதுமே எமது நோக்கமாகும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். யாழ்ப்பாணம் பிள்ளையார் இன் விடுதியில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் நலன்புரி நிலையங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அரச சார்பற்ற, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப் புலிகள் ஆகியோர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட பாடசாலைகள் தாமதமாகவே ஆரம்பமாகும்

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை நாளை முதலாம் தவணைக்காக ஆரம்பிப்பதில் இழுபறிநிலை காணப்படுவதாக தெரியவருகிறது.

சுனாமி அனர்த்தப் பாதிப்புக்களால் இடம்பெயர்ந்த மக்கள் போக்கிடமின்றி பாடசாலைகளிலேயே தஞ்சமடைந்துள்ளனர்.

அம்மக்கள் இன்னமும் மீளக்குடியமராத நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதில் தற்போது இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று யாழ்.அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கூட பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் உறுதியான முடிபு எடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளில் அல்லற்பட்டுக்கொண்டிருக்க ஏனைய பகுதிப் பாடசாலைகளை ஆரம்பிப்பது பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களுக்கு கல்வியில் சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாக அமையமாட்டாது. (14 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் நலன்புரிக்குழுவே நிவாரண விநியோகத்தில் ஈடுபடும்

## யாழ். செயலகக் கூட்டத்தில் முடிபு

(அலுவலக நிருபர்)

**யாழ் மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண விநியோகத்தில் நலன்புரி நிலையங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற நிவாரண விநியோக நலன்புரிக் குழுவே ஈடுபடுவது என்று யாழ். அரச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தப் பாதிப்புக்கள், அதன் மீள்கட்டுமானம், நிவாரண விநியோகம், பாதிப்புக்களின் விபரம் தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு நேற்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டிலேயே மேற்கண்டவாறு முடிபு எடுக்கப்பட்டது. இந்த மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்களும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் பின்வருமாறு,

⇨சுனாமி அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பாக சரியான திட்டவட்டமான மதிப்பீட்டை பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள் இணைந்து மேற்கொள்வது.

⇨அனர்த்தத்தால் உயிரிழந்தோர், காணாமல்போனோர் மற்றும் ஏற்பட்ட சொத்தழிவு தொடர்பாக (14 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபா, பொட்டம்மான் தொடர்பான அரசின் விசமப் பிரசாரத்திற்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும், புலனாய்வுப் பிரிவுத் தலைவரும் கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையில் சிக்கி இறந்து அல்லது காணாமல்போயுள்ளார்கள் என கடற்படைத் தளபதியை மேற்கோள்காட்டி அரச ஊடகத்துறையில் வெளியான விசமத்தனமான செய்தியை கண்டித்து விடுதலைப் புலிகள் நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக்காலை 6.00 மணிக்கு ஒலிபரப்பான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ( 14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான விஜயத்தில் அரசியல் நோக்கம் இல்லை

### ஐ.நா செயலர் கோபி அனான்



(கொழும்பு)

இலங்கைக்கான எனது விஜயம் மனிதாபிமான ரீதியிலான ஒரு பயணம் ஆகும். இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் அரசியல் நோக்கில் நான் இலங்கைக்கு வருகை தரவில்லை. (14 ஆம் பக்கம் பார்க்க)

## கோபிஅனானின் வடபகுதி விஜயத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று கவனஈர்ப்புப் போராட்டம்

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கோபிஅனான் வடபகுதிக்கு விஜயம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று யாழ்ப்பாணத்தில் கவனஈர்ப்பு போராட்டமொன்று இடம்பெறவுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாக முற்பகல் 11 மணிக்கு மிகவும் அமைதியான முறையில் இப் போராட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து மேற்கொள்ளவுள்ள இப் போராட்டத்தில் மனிதநேய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி அமைப்பினர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். (இ)



# 625 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க அரச உடைமைகள் முல்லையில் சேதம்

## அரச அதிபர் தெரிவிப்பு

அண்மையில் இலங்கையைத் தாக்கிய கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்க சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் 625 மில்லியன் ரூபா எனமதிப்பிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி மேரி இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

பொறியியலாளர்களையும் திணைக்கள தலைவர்களையும் கொண்டு இந்தப் மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. 38 கிராமங்கள முற்றாக ஆழிப்பேரலையில் சேத மடைந்துள்ளன

இதன் காரணமாக 5 ஆயிரத்து 484 குடும்பங்களைச்சேர்ந்த 21 ஆயிரத்து 128 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 23 நலனபுரி நிலையங்கள் இதுவரை திறக் கப்பட்டுள்ளன.

இவ் அனர்த்தத்தில் 800 மாணவர் கள் வரை பலியாகியுள்ளனர். 16 இந்துகோவில் 13 தேவாலயம் ஒரு பள்ளிவாசல சேதமடைந்துள்ளது. சில இந்து கோவில்களும் தேவாலயங்களும் ஆழிப்பேரலையால் அடித்துச் செல்லப் ·பட்டுள்ளன. 14 பாடசாலைகள் அழிக்கப் பட்டுள்ளன.

2 ஆயிரத்து 590 பேர் காயமடைந்தும், 1,068 பேர் காணாமலும் போயுள்ளனர். எட்டு அரச ஊழியர்கள் உட்பட 1,932 பேர் பலியாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 3,400 வீடுகள் முற்றாகவே சேதமடைந்துள்ளன. 600 வீடுகள் ஒரு பகுதி சேதமடைந்துள்ளன.

ஆழிப்பேரலையினால் எழு பாலங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன என முலலைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(ற-4)

# இலைகளைக்கருக்கிய சுனாமிப் பேரலை!

(மருதங்கேணி)

சுனாமி பேரலை தாக்குதலையடுத்து வடமராட்சி கரையோரப் பகுதியிலுள்ள தாவரங்களில் இலைகள் கருகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் பொது இடங்களில் நிற்கும் மரங்களின் இலைகள், கொடிகளின் இலைகள் அனைத்தும் கருகி உதிர்ந்து கொட்டியுள்ளதாக அப் பகுதிக்கு சென்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேரலையால் ஏற்பட்ட இரசாயனத் தாக்குதலால் இந்நிலைமை ஏற்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகிறது.(க-35)

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் வரைபடம் மாற்றி அமைக்கப்படும்

## கேணல் சூசை தெரிவிப்பு



(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வரைபடம் மாற்றி அமைக்கப்படும் என கடற்புலிகளின் சிறப் புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதி பொது அமைப்புக்களையும் மருதங்கேணி பிரதேச செயலரையும் உத்தியோகத்தர்களையும் வடமராட்சி கிழக்கு பொது மண்டபத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு உடனடியாக மின் சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்ப டவேண்டும்.

மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தியாவது இப்பகுதிக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப் படவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் உளவளத்தைக் கருத்திற் கொண்டு மின்சாரம் வழங்குவதற்கு அரச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ற43)

# சுவிஸ் பிரதிநிதிகள் வடமராட்சிக்கு விஜயம்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சுவிஸ்லாந்து நாட்டு தூதுவராலய பிரதிநிதிகள் விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் தாளையடி, செம்பியன்பற்று , மாமுனைப்பகுதிகளைச் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து இப்பகுதியில் உள்ள மக்களின நிலைப்பாடு குறித்துப் கேட்டறிந்த இவர்கள் அங்கு கருத்து வெளியிடுகையில்,

தமது நாட்டில் 42 ஆயிரம் தமிழ் மக்கள் வாழ்வதாகவும் அவர்களை தமது நாடு உரிய முறையில் பேணி வருவதாகவும் குறிப்பிட்டதுடன் சுனாமியால பாதிப்படைந்த பகுதிகளை புனரமைக்கவும் உரிய உதவிகளைச் செய்வும் தமது அரசு தயாராக இருப்பதாக தெரிவித்தனர்.

(ற-43)

# கடலிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் புதிய குடியிருப்புக்கள் அமைக்கப்படும்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கு கடலில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் புதிய குடியிருப்புகளை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுனாமியால் பாதிப்படைந்து பளைப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் தற்போது மருதங்கேணி பிரதேச செயலா பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்கே புதிய குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. பளை யில் இயங்கிய நலன்புரி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. (ற43)

# செய்தித் துளிகள்

## பட்டதாரிகள் புறக்கணிப்பு

(திருநெல்வேலி)

பட்டதாரிகளுக்கு வழங்கப்படு கின்ற நிரந்தர நியமனங்களின் போது வடமராட்சி கிழக்குப்பகுதி பட்டதாரி மாணவர்கள் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் 32 பட்டதாரி மாணவர்கள் பயிற்சிக் காக இணைக்கப்பட்ட போதும் இதில் எவருக்குமே நிரந்தரநியமனம் வழங்கப்பட வில்லை.

ஏற்கனவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பட்டதாரி நிரந்தர நியமனத்திலும் புறக்கணிக் கப்பட்டுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு இவர்கள் யாழ் அரச அதிபரைச் சந்தித்து முறையிட்டுள்ளனர்.(ற-43)

## பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

(பொன்னாலை)

யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவர்களுக்கான 2ஆம் அரையாண்டிற பரீட்சைகள் இம் மாதம் 3ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இப்பரீட்சைகள் நடைபெறவில்லை.

எனவே இவர்களுக்குரிய பரீட்சைகள் எதிர் வரும் 19ஆம் திகதி தொடக்கம் 2ஆம் திகதி வரை திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் இதில் மாற்றம் ஏதும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-49

## யாழ்.பல்கலைக்கழக முதலாம்வருட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ.பல்கலைக்கழக அனைத்துக் கலைப்பீட முகாமை கற்கைகள் படங்களைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் அனைவரையும் இன்றுகாலை 9.00 மணிக்கு பல் கலைக்கழக மாணவ பொதுஅறையில் ஒன்றுகூடுமாறு மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ். செல்வகுமார் கேட்டுள்ளார். (ச)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முற்பகல் 10.30 மணிக்கு நாவலர் மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள் ளது.

(ற-9)

## பற்சிகிச்சை பிரிவு மீண்டும் இயங்குகிறது

(சாவகச்சேரி)

I ꞏ 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் சேதமடைந்த சாவகச்சேரி வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பற்சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் நலன்கருதி வாரத்தில் 6 நாட்கள் பற்சிகிச்சைப் பிரிவு இயங்கும் என்று சாவகச்சேரி வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார். (கு-29)

## பஸ் சேவையில் மாற்றம்

(துன்னாலை)

பருததித்துறையிலிருந்து யாழ் நோக்கிச் செல்லும் வடபிராந்திய போக் குவரததுச் சபையின் சில சேவையில் மாற்றம் செய்யப் பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து யாழ் நோக்கிய இறுதி பஸ் சேவை மாலை 6.30 மணிக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை அச்சுவேலியி லிருந்து முகமாலைக்கு அதி காலை 5.15 மணிக்கு ஒரு சேவை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சு வேலிக்கு செல்லும் இறுதி பஸசேவை இடைக் காடுவரை செல்லும் எனவும்பருத்தித் துறைச்சாலை முகாமையாளர் தெரிவித்தார். (ச.113)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(காரைநகர்)

காரைநகர் சுழத்தச்சிதம்பரம் தேவஸ்தானத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி பஞ்சரத உற்சவம் நடைபெற்ற போது நாடெங்கும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்பு ஏற்பட்ட போதும், ஈழத்துச் சிதம்பர அடியார்களுக்கு எந்தவித பாதிப்புமேற்படாது அருள்பாலித்ததற்காக எம்பெருமானுக்கு நன்றி செலுத்து வதற்காகவும், அன்றையதினம் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகவும், ஏனையோரின் எதிர்கால சுபீட்சம் வேண்டியும் மேற்படி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை விஷேட அபிஷேகமும் திருவாசகமுற்றோதலும் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் மாணிக்கவாசகர் மடாலயத்தில் மகேஸ்வர பூசையும் அன்றையதினம் நடைபெறவுள்ளது. (ற-7)

## உலர்உணவு பொருட்கள்வழங்கப்படும்

(பருத்தித்துறை)

கடல்அன்னையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு தமது வீடுகளிலோ அல்லது உறவினர் நண்பர்களின்வீடுகளிலோ தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இத்தகையோருக்கான உலர்உணவுப்பொருட்கள் 4 நிலையங்களில் வழங்கப்படவுள்ளன. பருத்தித்துறை புனித அந்தோனியார் பாடசாலை, வல்வெட்டித்துறை சிவன்கோவில், கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஆகியவையே அவையாகும். (ற-7)

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வியியற் கல்லூரிக்கு 2005ஆம் ஆண்டுக்கான பயில மாணவர்கள் களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 25.26.27,28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியில் 30 ஆம் திகதியும் ஜனவரி 31 மற்றும் பெப்ரவரி 1,2 ஆம் திகதிகளில் வவுனியாவிலும் பெப்ரவரி 4,5,6 ஆம் திகதிகளில் மட்டக்களப்பிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக பீடாதிபதி கமலநாதன் அறிவித்துள்ளார். (ச)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடல் அனர்த்தத்தால் உயாகல்வி நிறுவனங்கள், யாழ். பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்பக்கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியியற் கல்லூரி, உட்பட உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், இம் மாணவர்களைத் தம்முடன் தொடர்பு கொணடு கல்வியைத் தொடர்ந்தும் மேறகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொளளுமாறு சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை கேட்டுள்ளது.

(ற)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம். வலயத்திற் .குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை யைச் சேர்ந்தவர்களி டம் இருந்தும், இலங்கை அதிபர் சேவையின் தரம்-1, தரம்-2. 1 ஐச் சேர்ந்தவர்களிட மிருந்தும் இப் பதவிக்காக விண்ணப்பங்கள கோரப்படுகின்றன.

இதற்கான மாதிரி விண்ணப் பப்படி வத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம். இதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திக திக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக் குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப் பாளா றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார். (ற)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(பொன்னாலை)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை, கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் சிக்கி இறைபதம் அடைந்தவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை வழிபாடு நடை பெறவுள் ளதுடன் திருவாசக முற்றோதலும் நடை பெறவுள்ளது. (கு-49)

# வலய ரீதியாக ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரிகளின் பெயர் விபரம்

## யாழ் வலயம்

இராஜநாயகம் விஜிதன், இராமேஸ்வரி சிவ சிதம்பரம், இராஜேஸ்வரன் சஞ்சீவன், இரட்ணம் சாந்தநாதன், யமுனா சண்முகசுந்தரம், கந்தசாமி இந்திராஸ், கங்கா சண்முகசுந்தரம், பிரபாகரன் கஜலட்சுமி, ஐயாத்துரை ஜெயதீபன், தங்கவேலாயுதம் கிரிதரன், துசிதா சிவயோகன், தவராஜா பிரதாப், மகாலிங்கம் புனிதராசா, அமுதலிங்கம் அமுதசொரூபன், கௌரி பரராஜசேகரம், தேவகி ஐயம்பிள்ளை, செந்திவேலாயுதம் பிரிந்தன், வேலும்மயிலும் மணிவர்மன், சந்திரவதனி புவிராஜன், சாம்பசிவம் அருள்மகேஸ்வரன், சத்தியசீலன் அற்புதராஜ், சின்னத்தம்பி செல்லையா சிறீரங்கன், சிற்றம்பலம் அகிலன், சண்முகசுந்தரம் திருக்குமரன், விஜிதா சுப்ரமணியம்.

## வலிகாம வலயம்

இரஜனி ஸ்கந்தவராதர், இராஜலெட்சுமி இராஜசிங்கம், இராஜினி கிருஸ்ணமூர்த்தி, ஜஸ்மின் ஜெயநிதி கிருபமூர்த்தி, ஜமுனா குணரெத்தினம், ஜீவாஜினி தியாகராசா, யாழினி ஞானத்துரை, யமுனாமலர் சந்திரசேகரம், டிலஸ் கொன்சன்ரீனின் மேரிகலிஸ்ரா, உதயலக்ஸ்மி சூரியகுமாரன்,

உமாதேவி விஜயரூபன், நந்தினி நடராசா, நாகதர்சினி சரவணபவன், நிர்மலா சுதர்சன், நிரஞ்சனா பக்திதேவன், நிரஞ்சலா நற்குணநாதன், நிலானி பாலசிங்கம், கயாலினி தெய்வநாயகம், கந்தையா வளர்மதி, கலையரசி கிருஸ்ணலிங்கம், கலைச்செல்வி முத்துக்குமாரசுவாமி,

கணேசராசா காந்திமதி, கிறிஸ்ரீன் ஜெயமேனன், கிறிஸ்ரீ வலன்ரைன் அதிசயமலர், கவிதா குமரகுலசிங்கம், கவிதா பாலசிங்கம், கவிதா தனபாலசிங்கம், கவிதா சிவபாதம், கருணாவதி வேலுப்பிள்ளை, கறுப்பையா யோகேஸ்வரி, கல்பனா பாலசுப்பிரமணியம், கலாஜோதி இராஜரெத்தினம்,

பூம்புவனேஸ்வரி சபாரத்தினம், பிரேமலதா வேலாயுதம், பிருந்தினி அருணோதயராஜ், பவிலுப்பிள்ளை ஜஸ்ரின் யூட், துஸ்யந்தி குமாரசுவாமி, துஸ்யந்தினி சஞ்சயன், தர்மினி குமாரசாமி, தர்மலிங்கம் ஸ்ரீலேகா, தர்மலிங்கம் உதயமலர், தர்சினி தர்மரட்ணம், தர்சினி செல்வரட்ணம், தமிழ்ச்செல்வி செந்திநாதன்,

தட்சாயினி கனகநாயகம், தில்லை நடராஜா குமாரதாஸ், திலகவதி ஜேகோப்சன், துசிதா கந்தசாமி, தவரஞ்சி தங்கராசா, மிதுனா புவிலிங்கம், ஆன்சந்திரா சிவனேந்திரன், ஆனந்தச் செல்வராணி செல்லத்துரை, அகிலா கனகரத்தினம், அமிர்தரஜனி அமிர்தலிங்கம்,

ஆரணி பூபாலசிங்கம், ஜெயக்கௌரி துரைசிங்கம், ஜெயசிங்கம் குமுதினி, கேமமாலினி உமா மகேஸ்வரி, யோகநாதன் லங்கராணி, கேலினி வரதராஜா, கௌரி இராசதுரை, பொன்னமதி பரமசிவம், தேவிகா தபேஸ்வரன், டொரின்வனிதா ஜோசப் இதயராஜ், சோபனா வேணுகோபாலசர்மா, செல்லாம்பிகை வீரசிங்கம், சுயாதா சிவராஜா, சுஜித்தா ரமணிதரன், சுஜிதா செகராஜசேகரம்,

சஜிதா சந்திரசேகரம், சுகந்தா செந்தூரன், சுகந்தினி பேரம்பலம், சுகந்தினி செல்வரெத்தினம், சுபந்தினி பரம்சோதி, சாந்தினி வாமதேவன், சுதாஜினி நடராசா, சுபோதினி சுப்பிரமணியம், சுரேஸ்குமார் பிரேமலோஜி, சின்னராசா அனுசியா, சிந்தியா கிறிஸ்ரி, சித்திராங்கி நவரட்ணம், சிவந்தி சிவநாயகம், சிவகாந்தினி சிவலிங்கம், சிவகுமார் தயாவாணி, சிவாஜனி சிவலிங்கம், சிவதர்சிகா இராஜதுரை,

சிவயோகவதனி லோகேஸ்வரன், சுசிலா கந்தசாமி, வனிதகுமாரி சிவ சரணம், வனிதா நவரத்தினராசா, விஜயகலா தனபாலசிங்கம், விஜயவாணி ஜெயதேவன், விஜயலதா வேனாட் ரமேஸ், விகர்சினி பாலநாதன், வசந்தகௌரி புஸ்பலிங்கம், வரகனி விஜயபாலன், வல்லிபுரம் சுதர்சினி, ரஞ்சிதமலர் கிருஸ்ணசாமி,

## தீவக வலயம்

இரஜமேஸ் அகல்வழி, இரகுரஞ்சன் சாந்தினி, இராஜரட்ணம் சசிகுமார், இராமேஸ்நேசன் சுமித்திரா, இராசலிங்கம் கந்தலிங்கம், யசோதா சிவசம்பு, ஜீவாஜினி கந்தசாமி, யசோதரா சாந்தகுமார், உமையாள் சபாரத்தினம், நாகமுத்து கருணாநந்தன், நாகமுத்து வாசுதேவன், கஜநந்தினி கனகு,

கனகராசா உதயகுமார், கனகராசா அருள்விழி, கந்தையா சுதன், கந்தசாமி மணிவண்ணன், காயத்திரி நாகேஸ்வரன், காயத்திரி கந்தன், காயத்திரி சபாரத்தினம், கார்த்திகா செல்வமகேசன், கலைமகள் இராஜரட்ணம், கலைச்செல்வன் பிரேமளா, கலைவாணி செந்தில்குமரன், குமுதினி பாலசுப்பிரமணியம், குமுதினி சண்முகநாதன், கிருபானந்தி பேரின்பநாயகம்,

கிறிஸ்ரோ ஜெசில்தா ரூபாசினி, கிறிசென்றியா ஒவின்சி சிவநாதன், கவிதா சுப்பிரமணியன், கல்பனா சர்வவேஸ்வரயர், புஸ்பலதா ஆறுமுகம், பூரணி சிறீகரன், பாமாராணி கணேசசர்மா, பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்,

பத்மப்பிரியா இராஜேஸ்வரன், பிரியதர்சினி பேரின்பநாயகம், பிரேமசாந்தி இராமச்சந்திரன், பிரபா மாணிக்கவாசகர், பிரபாசினி சுந்தரலிங்கம், பிரதீபா சத்திய சிவசர்மா, பிரசாந்தி வைத்திலிங்கம், வைதேகி வைகுந்தநாதன், வைதேகி சிவஞ்ஞானம், வைரவப்பிள்ளை பிரபாகரன், தயாநந்தினி தர்மகுலசிங்கம், தயாளினி நவசசன், தயாழினி பஞ்சலிங்கம், தயாளினி விக்னேஸ்வரன், தீபா தனபாலசிங்கம், திரிசா இராஜரட்ணம், தங்கலட்சுமி கேதீஸ்வரன்

தவரட்ணம் வரதன், முகுந்தன் யசோதராதேவி, மகாதேவன் செந்தில்குமார், மாதங்கி செல்வராஜா, மதுமதி மயில்வாகனம், மஞ்சுசீதா சிலம்பரநாதன், ஆனந்தலட்சுமி அருளானந்தம், அனுகீதா நீலாம்ஸ்ரோங், அனுசியா குமாரசாமி, அனுராதா கிருபாகரன், அம்பிகைபாலன் அமுதினி, ஜெயந்தி ஏகநாதன், ஜெயந்தினி தவம், ஜெயந்தினி விக்கினராஜன், ஜெயமங்கல ஜெராட்லாஷருஸ், ஜெனிதா இந்திரா, ஜெடராஜீரதா ஜாமிஸ், யோகேஸ்வரி தில்லைநாதன்,

நேசமலர் கந்தசுவாமி, கேமா தேவகி மரியதாசன், கேமமாலினி மகாலிங்கம், கௌரி பொன்னுத்துரை பெமினா கொலின், பேள் ரஞ்சினி டானியல் மதியழகன், சோபன் ரிபஸ் மோகனதாஸ், வேலுப்பிள்ளை யோகேஸ்வரன், ஞானேஸ்வரி திருஞானசம்பந்தன், சுஜாதா மகாலிங்கம், சுஜாதா தேவராஜன், சுகந்தினி செல்வநாயகம், சுகந்தினி சுப்பிரமணியம், சுகிர்தா இரத்தினசிங்கம், சகிலா துரைராசா, சுபதா சிவலிங்கம், சர்மிளா ஞானநந்தன், சர்மிளா இரதிதரன், சாரல் நவரோஜி சொலமன், சுதா முகுந்தன், சுதர்சினி நாகேஸ்வரபாலு, சுதாஜினி டொமினிக் சதாநந்தன் பாலசுகி, சுதர்சினி கந்தசாமி, சுடர்விழி செல்வராஜா,

சுஜேந்தா ஜெயரட்ணசிங்கம், சியாமளா அமிர்தலிங்கம், சிவகாந்தி சிவபாதசுந்தரம், சிவகலா ஐயம்பிள்ளை, சிவபதம் சிவகரன், சிவதர்சினி தங்கராசா, சிவதர்சினி தியாகராசா, சிவரஞ்சினி ரமணன், சங்கீதா கோபிநாத், சசிகலா கந்தசாமி, சசிகலா சிவமணி,

சசிரேகா லட்சுணராஜா, சுவானுதா தவநாயகம், சண்முகநாதன் யாமினி, சண்முகலிங்கம் வினோதம், வனஜா தில்லைநாதலிங்கம், வத்சலா இராஜரட்ணம், விஜயலட்சுமி இராஜதுரை, விஜிகாந்தினி ஜீலியஸ், என். சஷிந்தினி, லாவன்யா யோகராஜா

## வடமராட்சி வலயம்

இர்குநாதன் சுதா, இராஜேஸ்வரி நடராஜா, யாழினி பாலசுந்தரம், உசாயினி பேரானந்தம், உசாந்தினி செல்லத்துரை, நிருஜா பத்மநாதன், கஸ்தூரி திருப்பதி, கார்த்திகா சதாசிவம், குணேஸ்வரி கனகசபாபதி, கணபதிப்பிள்ளை ஜெயக்குமார், புஸ்பதேவி தயாபரன், பாமிலா சுதர்சன், பத்மராணி கருணாகரன், பிரேமிலா யோகேந்திரன்,

பிரேமிலா சண்முகதாஸ், பவானி சிவசோதிதுரை, ஐயாத்துரை தயாபரன், தனுசியா ஜெகதீசன், தாட்சாயினி தவராஜா, தீபா தவராஜா, திருவேணி தவநேசன், மகிழினி வைரவப்பிள்ளை, மனோரஞ்சினி தியாகராஜசர்மா, மீரா சிவராஜா, மஞ்சுளா தாமோதரம், முருகேசு நந்தினி, அகல்யா ஈஸ்வரதேவன்,

ஜெயவாணி செல்லையா, ஜெயராணி சுப்பிரமணியம், யோகேந்திரராஜா சாந்தரூபன், கேதீஸ்வரன் கவிதா, மேரி டக்சினி சிவராஜா, செல்வரஞ்சினி மார்க்கண்டு, ஞானதர்சினி கிருபாகரன், சுனித்தா இராஜேஸ் கண்ணன், சுகந்தினி தனபாலசிங்கம், சுப்பிரமணியம் தில்லைநாதன், சாந்தினி ராமலிங்கம், சுதாறினி துரைராஜா, சித்ரா சதாசிவம், சிவாஜினி திலகநாதன், சிவாஜினி செல்வராஜா, சிவனேஸ்வரி கணபதிப்பிள்ளை, சிவராணி முருகுப்பிள்ளை, சிறிகாந்தன் பத்மினி, சிறி சண்முகப்பிரியா வேலாயுதன்,

விமலநாயகி கணபதிப்பிள்ளை, வினோதினி பழனிச்சாமி, வளர்மதி வடிவேலு, ரஜிதா நகுலன், ரதீஸ்வரி பிள்ளையானந்தன்,

## தென்மராட்சி வலயம்

இராஜலோசினி சின்னத்தம்பி, நந்தினி ஜென்சன் றொனால்ட், நாகறோகினி விநாயகமூர்த்தி, நாகவதனி பரராஜசிங்கம், நடராசா தமிழ்ச்செல்வன், கலைமகள் சண்முகநாதன், கணேசபிள்ளை விஜயரூபி, கிருஷ்ணவேணி சோமஸ்கந்தசர்மா,

கவிதா ஜோரமனஸ்லி, கணபதிப்பிள்ளை வளர்மதி, புஸ்பரூபி ரகுராம், பூபாலசிங்கம் பார்த்தீபன், புனிதமலர் இராஜரத்தினம், பத்மவேணி கணேசமூர்த்தி, பிரணதி அருளப்பு, பவானி கிட்ணபிள்ளை, தர்மினி தர்மலிங்கம், தீபா கதிரவேலு, தவசொரூபி கந்தசாமி,

மாதங்கி முத்துக்குமாரசாமி, மதுரைவாசினி நஜிலற்றபிள்ளை, மீனலோஜினி அருணாசலம், மஞ்சுளா சிவசம்பு, அனிஸ் டெய்சி கிறிஸ்தோபர், ஜெயந்தி நாகராசா, ஜெயந்தினி இராஜலிங்கம், கோமதி ஜேசுதாஸன், வேலாயுதம் சிறீதா, ரேகா சுந்தரராஜன், ஞானகி செல்லத்துரை, சந்திரராசா இராஜமோகன், சுந்தரரூபி தங்கராஜா,

சுகன்யா நாகராஜா, சுகந்தா கதிரேசு, சுகந்தினி சிவகுமார். சுபாஷினி தில்லைநாதன் [illegible]ஷினி ஸ்ரீகாந்தன், சர்மினி ஐயாத்துரை, சாமினி மகேஸ்வரன், சுதர்சினி வைரமு[illegible], சுதாஜனி சங்கரப்பிள்ளை, சுதாமதி சுந்தரம், சுதர்சினி மரியஞான சீலன், சுதர்சினி வசந்தகுமார், சியாமா சிவபாதசுந்தரம், சிவசுதானி கிரிவேல், விஜயா சனாதனன், வினோதினி அரியரத்தினம், விரதஷாரணி குலராஜசிங்கம், ரஜிதா தம்பிராஜ், ரஞ்சனா செல்வராஜ்.

# வாசுதேவ நாணயக்கார வடமராட்சிக்கு விஜயம்

(துன்னாலை)


இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணக்கார நேற்றுக்காலை வடமராட்சிக்கு விஜயம் செய்தார்.

இவர் கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேசத்தைப் பார்வையிட்டதுடன், வதிரியிலுள்ள சுனாமி கடல் அனர்த்த விசேட கரும பீடத்திற்குச் சென்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இனப் பாகுபாட்டிற்கு எதிரான சர்வதேச அமைப்பின் தலைவி நிமால்கா பெர்ணான்டோ இடதுசாரி முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி மைய இயக்குனர் சரோஜா - சிவச்சந்திரன் ஆகியோரும் இவருடன் வடமராட்சிப் பகுதிக்குச் சென்று அழிவுகளைப் பார்வையிட்டனர்.

வாசுதேவ நாணக்கார அங்கு கருத்துத் தெரிவிக்கையில், தமது இடதுசாரி முன்னணியானது யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெண்கள் அபிவிருத்தி மையமூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குமெனக் குறிப்பிட்டார். (ற-101)



இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார சுனாமி அனர்த்தம் பற்றி கருமபீடத்தில் அழிவுகள் பற்றி கேட்டறிந்துகொள்கிறார்.

அவருடன் கூட வந்த கட்சித் தொண்டர்களும் இனப்பாகுபாட்டிற்கு எதிரான அமைப்பின் சர்வதேசத் தலைவி நிமால்கா பெர்ணான்டோவும் காணப்படுகிறார்.

படங்கள் எஸ். இராமச்சந்திரன்

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?



## விருச்சிகம்

நீங்கள் திடகாத்திரம் கூடிய சதை பிடிப்புடன் போதிய அளவான உயரத்தையும், மத்திம நிறத்தையும் உடையவர்கள். பார்வைக்குச் சாந்மான தோற்றத்தையும் ஆடம்பரமான ஆடை அணிகலன்கள் அணிபவராகவும் இருப்பீர்கள். எதையும் சாதிககும் வல்லமையையும் கொண்டவர்கள்.

சனி பகவான் வருட ஆரம்பம் முதல் 25.06.2005 முடிய உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் அஷ்டமச சனியாகச் சஞ்சரிக்கவுள்ளார். இதனால் அனாவசியச செலவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வீண் விவகாரங்கள் வந்து சேரும்.

சனிபகவான் 26.06.2005 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். இதனால் முன்னோர்கள் தேடி வைத்த பூர்வீகச் சொத்துக்களில் சிலபல வில்லங்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்பு உங்களைத் தேடிவரும். எதிரிகளால் ஏற்பட்டிருந்த உபத்திரவங்கள் நீங்கும். செய்தொழில் வியாபாரங்களில் கணிசமான இலாபம் கிட்டும்.

குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்குப் பதினோராமிடத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை உயரும். அரசாங்க உதவிகள் எளிதில் கிட்டும். புதிய நகைகள வாங்கலாம். எடுத்த காரியம் பழுதின்றி முடியும்.

19.09.2005 முதல் வருடம் முடிய குரு பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிப்பதால் சேர்த்து வைத்த பணம் ஏதாவது ஒரு வகையில் விரயமாகிப் போகும். திட்டமிட்ட காரியங்களில் வீண் அலைச்சலும் தடை தாமதங்களும் உருவாகும்.

வருட ஆரம்பம் முதல் 4.03.2005 வரை ராகு ஆறாமிடத்திலும் கேது பன்னிரெண்டாமிடத்திலும் சஞ்சரிக்க உள்ளனர். இதனால் பணபலம் படை பலம் இரண்டும உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். கடன் தொல்லை குறையும். சொந்த பந்தங்கள் உதவிக்கு வருவார்கள்.

### ஜனவரி

குடும்பம் : குடும்ப வளச்சி நல்ல நிலையில் இருக்கும். சொந்த பந்தங்கள் ஆதரவு காட்டுவார்கள். கணவன், மனைவி ஒற்றுமை திருப்திகரம். பொருளாதாரம் : பண்ப்புழக்கம் சரளமாகும். வங்கி சேமிப்பு உயரும். கடன்கள் அடைபடும். ஆரோக்கியம் : பாதிபபு இல்லை. தொழில் வியாபாரம்: சில அதிரடி முடிவுகளை எடுப்பதன் மூலம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ் நிலை நிலவும். பெண்கள்: நலம் பெறுவார்கள். வீட்டிறகுத் தேவ்வயான அத்தியாவசியப் பொருட்களையும் அலங்கார ஆடம்பரப் பொருள்களையும் வாங்கி மகிழலாம்.
சாதகமானதிகதிகள் :2,3,7,11,18,20,26,28,30.

### பெப்ரவரி

குடும்பம் :கணவன், மனைவி உறவில் சந்தோஷம் நிலவும். பெரியவர்கள் ஆதரவு காட்டுவார்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் நல்ல நிலையில் இருக்கும். பொருளாதாரம் : வருமானம் அதிகரிக்கும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகும். கடன்கள் அடைபடும். வீண் செலவு குறையும். ஆரோக்கியம் : நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: சில நவீன உத்திகளைக் கையாண்டு உற்பத்தி - விற்பனையை அதிகரிக்கலாம். புதிய ஒப்பந்தங்கள் குறித்த நாட்களில் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. பெண்கள் : சந்தோஷமடைவார்கள். குடும்பத்தினர் உங்களது சொல்பேச்சைக் கேட்டு நடப்பார்கள். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். மாணவர்கள்: இலக்கியம் ஆகிய துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள்: 3,4,7,8,14,15,17,19,20,24,27.

### மார்ச்

குடும்பம் : குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். சுபகாரிய முயற்சிகள் வெற்றி தரும். உறவினர்களின் வருகை அதிகரிக்கும். பொருளாதாரம்: முட்டுக் கட்டைகள் நீங்கும். வரவேண்டிய பாக்கிகள் தாமதமின்றி வசூலாகும். பணத்தை வங்கி, பூமி முதலியவற்றில் முதலீடு செய்யலாம். ஆரோககியம்: உடல் பலம்பெறும், பெரியவர்களின் உடல் நலனில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் படிப்படியாகக் குணமடையும். தொழில் வியாபாரம்: அபிவிருத்தியடையும். திறமையான தொழில் தெரிந்த வேலையாட்கள் கிடைப்பார்கள். புதிய தொழில்கள் , கிளைகள் துவங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கும். பெண்கள்: நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நகைகள் வாங்கி மகிழலாம். மாணவர்கள் : மருத்துவத்துறையில் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் :3,7,13,14,16,23,24,25,30,31.

### ஏப்ரல்

குடும்பம் : பெரியவர்களின் ஆதரவும் அனுகூலமும் உண்டாகும். பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் நல்லபடியாக நடக்கும். கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். பொருளாதாரம்: நாலாவழிகளிலும் வருமானம் வரும். வராக் கடன்கள் எளிதில் வசூலாகும். பணத்தை பூமி மனை முதலியவற்றில் முதலீடு செய்யலாம். வங்கி சேமிப்பு உயரும். ஆரோககியம்: நல்ல நிலையில் இருககும். தொழில வியாபாரம்: அபிவிருத்தி அடையும். போட்டித் தொழில் வியாபாரங்களைச் செய்பவர்களின் சவால்களைச் சந்திக்க நேரும். அதில் சுலபமாக வெற்றியடைந்து முன்னேற்றத்தை அடைய முடியும். பெண்கள்: சந்தோஷமான சூழ்நிலை நிலவும். வேலை தேடுவோருக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். மாணவர்கள் : அரசியல் விஞ்ஞானம், விலங்கியல ஆகிய துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் :3,11,7,12,14,16,19,20,26,27.

### மே

குடும்பம் : நல்ல நிலையில் இருக்கும். கணவன் மனைவி ஒற்றுமை பாராட்டத்தக்க அளவில் இருக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் திரும்ப வநது சொந்தம் பாராட்டுவார்கள். பொருளாதாரம்: கொடுக்கல், வாங்கல் கட்டுக்குள் இருக்கும் செலவுகள அளவோடு இருக்கும். பணவரவுகள் சுமார் நிலையில் காணப்படும். சில உணர்ச்சிப் பூர்வமான சூழ்நிலைகள் வரவு - செலவில் காணப்படும். ஆரோக்கியம் : தொழில் வியாபாரம் : முன்னேற்றமான நிலையிலேயே இருக்கும். தொழில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் உங்களது நலம் விரும்பிகளின் ஆலோசனைகளை நாடவும். பெண்கள்: தெய்வீகத் திருத்தலங்களுக்கு யாத்திரை செல்லும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் எதிர்காலத்தைக கருத்தல் கொண்டு தீட்டிய திட்டம் வெற்றி பெறும்.
சாதகமான திகதிகள் :1,7,8,10,17,20,24,26,28.

### ஜூன்

குடும்பம் :பிள்ளைகள் விஷயத்தில் சில சிரமங்கள் ஏற்படும். வயதானவர்களுக்கு வேண்டிய வசதிகள் கிட்டாது. கூட்டுக் குடும்ப வாழ்கையில் சில குளறுபடிகள் ஏற்படும். பொருளாதாரம்: பணவரவு தடைபடும். அனாவசயச் செலவுகள் அதிகரிக்கும். பணம், சொத்து அல்லது தனக்குப் பிரியமான பொருளைப் பிறரை நம்பிக் கொடுத்து ஏமாற நேரும். ஆரோக்கியம்: சுகவீனம் ஏற்படும். மருந்து மாத்திரைகளால் அவை சரியாகும். தொழில் வியாபாரம்: ஆகாயக் கோட்டை கட்டி எதையும் செய்து விடலாம் என்று இருந்தீர்களானால் அதெல்லாம் சரிவராது. பல நல்ல சந்தப்பங்கள் வந்தும் கூட அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்த முடியாமல் நஷ்டப்பட நேரும். பெண்கள்: உடல் நலனில கவனம் தேவை. பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவது நல்லது.
சாதகமான திகதிகள்: 3,4,6,13,16,20, 21,24,25.

### ஜூலை

குடும்பம் :குடும்பத்தில் அன்னியரின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தி விடுவார்கள். தேவையற்ற வாக்கு வாதங்களையும் தவிர்ப்பது நல்லது. பொருளாதாரம்: தகுந்த பாதுகாப்பு இல்லாமல் யாருக்கும் கடன்தரவேண்டாம். வரவேண்டிய பாக்கிகள் தாமதமாக வசூலாகும். அனாவ்சியச் செலவுகள் உண்டாகும். ஆரோக்கியம் : பித்தவாந்தி, தலைவலி முதலிய உபாதைகள் ஏற்பட இடமுண்டு. தொழில் வியாபாரம்: போட்டியாளர்கள சதித்திட்டத்தால் தொழில் வியாபாரத்தில் சில சங்கடங்கள் உருவாக வாய்ப்பு உண்டு. ஆயினும உங்கள் சாதுர்யத்தால் அவற்றை முறியடித்து விடுவீர்கள். பெண்கள்: கோபத்தைக் கறைத்தக் கொள்ள வேண்டும். மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். தேவையறற இடமாற்றம் ஏற்பட இடமுண்டு.
சாதகமான திகதிகள்: 3,10,11,13,17,18,20,22,26,28,30.

### ஆகஸ்ட்

குடும்பம் : குறைகளையெல்லாம் கொஞ்சம், கொஞ்சமாகச் சரிசெய்து வருவீர்கள். வந்த விருந்தினர்களையெல்லாம் நன்கு உபசரிப்பீர்கள். சொந்த பந்தங்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். பொருளாதாரம் : கடந்த இரு மாதங்களாக இருந்து வந்த கஷ்ட நிலை மாறும். பணவரவு சரளமாக இருக்கும். சேமிப்புக்கும் இடமுண்டு. இன்சூரன்ஸ், ஏலச் சீட்டுகள் மூலமாகவும், பணம் வரும். ஆரோக்கியம் : சுகவீனங்கள் படிப்படியாக சரியாகும். தொழில் வியாபாரம் : கூடுமானவரை சொந்தப் பணத்தை இழக்காமல் பெரும்புள்ளிகளின் உதவியால் அதிக ஆதாயம் பெறுவீர்கள். பணியாட்கள் மூலமும் ஆதாயம் உண்டு. அரசு வழி சலுகைகள் கிடைக்கும். பெண்கள் :தொழில் சார்ந்த சில முயற்சிகள் வெற்றி பெறும். அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.
சாதகமான திகதிகள்:1, 2, 3, 9, 10, 12, 14, 18, 24, 25, 26.

### செப்டம்பர்

குடும்பம் : குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். பூர்விகச் சொந்தங்களால் ஆதாயம் உண்டாகும். புதுமுறை உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். சுபகாரியம் நடைபெறும். பொருளாதாரம் : பண வருமானம் அதிகரிக்கும். உபயோகமில்லாத காாயத்தைச் செய்தாலும் அதில் நாலு காசு வருமானம் வரும். எதிரிகள் மூலமாகக்கூட பணவரவு உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: அதிர்ஷ்ட தேவதை உங்கள் கதவைத் தட்டும் நேரம் தொழில் வியாபாரத்தில் தூள் கிளப்புவீர்கள். புதிய நவீன இயந்திரங்கள், தொழில் தெரிந்த பணியாட்கள் ஆகியவற்றை ஏற் படுத்துவதன் மூலம் - உற்பத்தி - விற்பனை பல மடங்கு பெருகும். பெண்கள் : உங்களது எண்ணம் ஈடேறும். திருமணம் புத்திர பாக்கியம் முதலியவற்றை அடைவீர்கள். மாணவர்கள் : பொறியியல் துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள்: 3, 5, 6, 14, 16, 21, 22, 23, 30.

### அக்டோபர்

குடும்பம் : உறுதியான மனத்துடன் எதைச் செய்வது என்று கணக்குப் போட்டு குடும்ப நிர்வாகத்தைச் சீராக் கொண்டு செல்வீர்கள். பெற்றோர்கள் மனைவி மக்கள் ஒற்றுமையுடன் பாடுபடுவார்கள். பொருளாதாரம்: பல வழிகளிலும் வருமானம் வரும். பணத்தை மனை, பூமி, தொழில் முதலியவற்றில் முதலீடு செய்யலாம். கடன்கள் அடைக்கப்பட்டு கையிருப்பு அதிகரிக்கும். ஆரோக்கியம் : நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம் : முன்னேற்றம் உடையதாக இருக்கும். கூட்டு முயற்சிகளும் கைகூடும். அன்னிய இனத்தவரால் எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் அமையும், புதிய ஓடர்கள் கிடைக்கும். பெண்கள்: குடும்பதினருடன் உல்லாசப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு.
சாதகமான திகதிகள் :1,7,8,12,15,18,19,20,27, 28,30,31.

### நவம்பர்

குடும்பம் :கணவன், மனைவி ஒற்றுமைக்கு களங்கம் வராது. இடர்பாடுகளை ஒரு பொருட்டாகக் கருதாமல் நம் குடும்பம் நமது பணி என்று நீங்கள் அலையும் அலைச்சலை உணர்ந்த குடும்பத்தினர் நடந்து கொள்வார்கள். பொருளாதாரம் : கொடுக்கல் வாங்கல் கட்டுக்குள் இருக்கும் வரவேண்டிய பாக்கிகள் ஓரளவு வந்து சேரும். அனாவசியச் செலவுகள் மட்டுப்படும். ஆரோக்கியம்: உடல் பலமும் நலமும் பெறும். தொழில் வியாபாரம்:அபிவிருத்தி அடையும். சில குறுகிய பயணங்கள் ஏற்பட்டு அதன் மூலம் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும. அதில் நல்ல வருவாய் உண்டாகும். பெண்கள்: குடும்பத்தினரை அனு சரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம். திருமணமாகாத இளம் வயதினருக்குத் திருமண முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள்: மருத்துவத்துறையில் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் : 4,6,8,14,15,16,17,24,26,27.

### டிசம்பர்

குடுமபம் : குடும்பம் அமைதியான சூழ்நிலையில் நடக்கும். பிள்ளைகளின் கல்வி, உடல்நலம், தொழில் உத்தியோகம் ஆகியவவை நல்ல நிலையில் இருக்கும். பெரியவர்களால் ஆதாயம் உண்டு. பொருளாதாரம்: பணவரவு அதிகரிக்கும். கொடுககல், வாங்கல் சரளமாக நடக்கும். வருமானத்தை வங்கி முதலியவற்றில் சேமிக்கலாம். ஆரோக்கியம் : திருப்திகரமாக இருக்கும். தொழில் வியாபாரம் : இருப்பு வைத்துள்ள சரக்குகள் நல்ல விலைக்குப் போகும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டாகும். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். பெண்கள்: புதிய நகை நட்டுகளை வாங்கியும் அணிந்தும் மகிழலாம்.
சாதகமான தககிகள் : 1, 2, 5, 6, 12, 14, 16, 17, 21, 22.

(தொடரும் ....)

# விடுதலைப்புலிகள் - படையினர்

# திருமலையில் சந்தித்துப் பேச்சு

(திருமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் துறையினருக்கும் இராணுவம், பொலிஸார் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பு காலை 10.35மணிக்கு ஆரம்பமாகி 11.50 மணிவரை நீடித்தது.

விடுதலைப்புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், திருகோணமலை மாவட்ட சமாதான செயலகப் பொறுப்பாளர் நெடுமாறன், இராணுவத்தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டையிடும அதிகாரி மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரியா, பிரிகேடியர் உடுமலகெல, மேஜர் எம்.முடநாயக்கா, திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பகூபாலி ஹேவஹே ஆகியோர் கலந்து கொண்டனர். போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் சார்பில் ஹேலலை பேர்க ஹெலன் பொஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

திருகோணமலையில் நலன்புரி நிலையங்கள் நடைமுறைப்படுத்துவது வழமையான நடைமுறையின் படி நடைபெறும் எனவும், இதற்கு மேலாக இராணுவத்தின் தரப்பில் ஒரு பிரதிநிதியும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தரப்பில் ஒரு பிரதிநிதியும் மற்றும் கிராம சேவையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகதஸ்தர், முகாமில் தங்கியிருக்கும் மக்களின் பிரதிநிதிகள் மூவா இணைந்து இதனை நிர்வகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின்னர் இராணுவ அதிகாரிகளும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் இணைந்து உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்திற்குச் சென்றனர்.

அங்கு மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு இராணுவம் இம் முகாம்களைப் பொறுப்பெடுக்கவில்லை எனவும், அரசாங்க அதிபருக்கு முகாம் பற்றிய தேவைகளைத் தெரிவிப்பதற்காகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்விப்பதற்காகவும், இராணுவத்தின் தரப்பில் ஒருவர் அக்குழுவில் இணைந்து கூட்டங்களில் கலந்துகொண்டு தேவைகளை எடுத்துரைப்பார்கள் என மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரியா அங்கு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலனிடம் தெரிவித்தால் அவர் எனக்குத் தெரிவிப்பார். நான் உடனடியாக ஸ்தலதற்கு விரைந்து பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண்பேன் எனவும் தெரிவித்தார். திருகோணமலையில் 45 முகாம்களில் இராணுவத்தினரும், 20 முகாம்களில் கடற்படையினரும், 5 முகாம்களில் விமானப் படையினரும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)

# சட்டவிரோத மணல் ஏற்றியமை; அறுவருக்கு 60 ஆயிரம் அபராதம்

(பொன்னாலை)

சட்டவிரோதமாக மணல் ஏற்றியமைக்காக சாவகச்சேரி நீதிமன்றம் 6பேருக்கு 60ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மணல் ஏற்றிச்சென்ற ஆறு வாகனச் சாரதிகளுக்கு மொத்தம் 60 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

மூன்று உழவு இயந்திரங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதமும், மூன்று பாரவூர்திகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதமுமே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்று மணல் ஏற்றிச்சென்ற மேற்படி வாகனச் சாரதிகள் குறித்து கடந்த 3ஆம் திகதி சாவகச்சேரிப் பொலிஸாரால் தாககல் செய்யப்பட்ட வழக்குகளுக்கே நதிவான் மேற்படி அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

(ற-49)

# கையடக்கத் தொலைபேசி வர்த்தகத்தில் பின்னடைவு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான வர்த்தக முயற்சிகளில் குறிப்பிட்டளவு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அவற்றிற்கான உதிரிப்பாகங்களின் இறக்குமதி மீதான வரி அதிகரிக்கப்பட்டமையே இதற்கான காரணமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வரி ஒன்றிலிருந்து பதினைந்து சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரிப்பைத் தொடர்ந்து முன்னணி நிறுவனங்கன் பலவும் கையடக்கத் தொலைபேசி வர்த்தகத்திலிருந்து விலகும் போக்கு தென்படுகிறது.

சில கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களின் விற்பனை முப்பத்தைந்து சதவீதத்தால் குறைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ற-7)

# இலங்கையின் அமைவிடத்தில் மாற்றம்?

(கொழும்பு)

இலங்கையின் சுமார் மூன்றில் ண்டு பகுதி கரையோரமானது சுனாமியால் பேரழிவுக்குட்பட்ட பின்னர் தீவின் கரையோரம் மாற்றமடைந்திருக்கக்கூடும் என்ற கருத்துகளுக்கு மத்தியில் தேசப்பட வரைஞர்கள் திசை நிலையை அறிவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புவி நிலை அமைப்பு முறையானது சுனாமி தாக்கிய டிசெம்பர் 26ஆம் திகதியின் பின்னர் தீவின் திசை நிலையானது குறிப்பிடத்தக்களவு மாறியிருக்கமுடியாது என்று காட்டுவதாக இலங்கை நிலவளவையாளர் நாயகம் பி.ஜே.பி.மென்டிஸ் தெரிவித்தார்.

எப்படியிருந்த போதிலும் இங்கு அதிகாரிகளிடம் உள்ள கருவியால் மூன்று மீற்றர்களுக்கிடையிலான மாறறத்தைப் பதிவு செய்ய முடியாது.

ஆகாய கடல் போக்குவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக ஏதாவது அசைவு ஏற்பட்டிருக்கும் என்று கருதவில்லை என்று மென்டிஸ் கூறினார்.

சுனாமிக்குப் பிந்திய புவி நிலை அமைப்புமுறையின் வாசிப்புகளை முன்னைய எங்கள் வாசிப்புகளுடன் ஒப்பிட்டோம்.

எமது கருவியானது துல்லியமான அளவீட்டிலிருந்து மூன்று மீற்றர் கூடுதலாக அல்லது குறைவாக காட்டக்கூடியது.

எங்களுடைய வாசிப்பு வித்தியாசம் சுமார் ஒரு மீற்றராக மட்டுமே இருந்தது.

தீவானது தன்னளவில் சிறிதளவில் கூட அசைந்திருக்கின்றதா என்று மேலும் துல்லியமாக அறிய வேண்டும் எனில் வெளிநாட்டு உதவி மற்றும் செய்மதி விம்பங்கள் எங்களுக்குத் தேவை என்றும் குறிப்பிட்ட அவர், தன்னிடம் உள்ள வாசிப்புகளைக்கொண்டு தீவு நகர்ந்திருக்கின்றதா என்று உறுதியாகக் கூற முடியாது என்றும் கூறினார்.

(ற)

# சொக்கன் நினைவுச் சிமிழ்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் - கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் நினைவுச் சிமிழ் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிமை பி.ப.4மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்த ஆதனத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அஞ்சலி உரைகள -"சொக்கன் சிறுகதை" நூல் வெளியடும் நடைபெறுமென இவ் அமைபபின் அமைப்பாளர் நயினை கி.கிருபானந்தா தெரிவித்துள்ளார்.

(த-101)

# பொலிஸ் பாதுகாப்பு

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு தத்தமது இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் பெருமளவான மக்கள் தங்கியுள்ளனர்.

இவ்வாறு வடமராட்சிப் பகுதியில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸார் இவ்வாறு பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையானது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-101)

# சமுகமளிக்குக!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை கல்லூரிக்கு வருகைதருமாறு பீடாதிபதி ரி. கமலநாதன் கேட்டுள்ளார்.

இதேவேளை, நாளை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளதால் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சென்று கடமையினைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறும் பீடாதிபதி அறிவித்துள்ளார். (ச)

# மருந்துகள் தட்டுப்பாடு

(பொன்னாலை)

சங்கானை அரசினா வைத்திய சாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்புவலிக்கான தடுப்பூசி உட்பட பல அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது இவ் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-19)

# விபத்தில் போராளி காயம்

(துன்னாலை)

ஆவரங்கால் பகுதியில் மேட்டார் சைக்கிளும் ஹண்டர் வாகனமும் மோதியதில் போராளி ஒருவர் காயமடைந்தார்.

யாழ்.மாவட்ட கடற்புலிப்போராளியான அருணன் என்பவரே காயமடைந்தவராவார். (ச-101)

# நேர்முகப் பரீட்சை

(பொன்னாலை)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைஞர் கற்கைநெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளதாக தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன அறிவித்துள்ளார்.

கற்கைநெறிக்கு விண்ணப்பிதத அனைவரையும் இந் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு, ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

(ற-49)

# யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மனிதாபிமானப் பணிகளில்!

(யாழ்ப்பாணம்)

'சுனாமி' கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான அடிப்படையில் கட்டட இடிபாடுகளைத் துப்பரவாக்கும் பணியில் யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை முனைப்பகுதியில் சுமார் 50 ஊழியர்கள் கடந்த 3 தினங்களாக இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் பலர் வெளியூரைச் சேர்ந்தவர்களானதால் அனேகர் அங்கேயே முகாம் அமைத்து இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மற்றொரு குழுவினர் நாவற்குழியில் அமைந்துள்ள யாழ். செயலகத்திற்குச் சொந்தமான களஞ்சிய சாலையில், பொது அமைப்புகள் ஊடாகவும் வெளிமாவட்டங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற நிவாரணப் பொருட்களை தரம்பிரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(ற-5)

# மரணதண்டனை சிபார்சுகள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும்

(கொழும்பு)

நாட்டில் மிகவும் சர்ச்சைகளைக் கிளப்பிய படுகொலைகள் உட்பட மோஷமான குற்றச்செயல்களுடன் தொடர்புடையோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறை வேற்றுமாறு கோரி சட்டமா அதிபர் கமல சபேசன் தனது சிபார்சுகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவுள்ளார்.

இந்தியா மொடல் அழகி ரீட்டாஜோன், உதவி சுங்க அத்தியட்சகர் சுஜித் பிரசன்ன, மத்துகம சிறுவன் சதீப லக்ஷன் ஆகியோரின் படுகொலை வழக்குகளில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோருக்கு மரணதண்டணை விதிக்கப்பட்டுள்ளது.

அவற்றை நிறைவேற்றுவது தொடர்பான ஆலோசனைகள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-07)

# பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு மாதத்தில் இருதடவை நிவாரணம்

(வியாபாரிமூலை)

அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறையை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த மககளுக்கான அரச நிவாரணப் பொருட்கள் அரச அதிபரினூடாக கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் விநியோகம் செய்யப்படுகிறது.

இந்த அடிப்படையில் ஒருவருக்கு 6கிலோ மாவும், 900 கிராம் பருப்பும், 450கிராம் சீனியும் 2 வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகின்றன.

பருத்தித்துறை ஆத்தியடியிலுள்ள விஷேட நிலையத்தில் ஜே/409, ஜே/410, ஜே/411, ஜே/412, ஜே/413 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் பருத்தித்துறை நான்காம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தேவாலய விஷேட நிலையத்தில் ஜே/414, ஜே/415 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் நெல்லண்டை பத்திரகாளி கோவிலடியில் அமைந்துள்ள விஷேட நிலையத்தில் ஜே/400 தொடக்கம் ஜே/408 வரையான கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இவற்றை காலை 8 மணி தொடக்கம மாலை 5 மணிவரை தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

(ற-108)

# கனேடியப் பிரதமர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு கனேடியப் பிரதமர் கொல்மாட்டின் அடுத்த வாரம் விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 16,17,ஆம் திகதிகளில் கனேடிய பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட "சுனாமி" பேரலைகளினால் கனேடிய பிரஜைகள் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு 146 பேர் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-09)

# சுனாமி நிவாரண உதவி இலங்கைக்கு 25 கோடி டொலர்

## இந்தோனேஷிய மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு கடன் வழங்கிய சில நாடுகள் அதனை மீளப்பெறாமல் கடன விடுப்பை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் தொடர்பாக இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் கூட்டமொன்று இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கடன் வழங்கிய நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியதாக அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கனடா, இத்தாலி, யப்பான், சீனா உட்பட சில நாடுகள் இவ்வாறு கடன்விடுப்பு வழங்குவதற்கு இணங்கியுள்ளன. இலங்கைக்கு நிவாரண அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுவது இல்லையெனவும் இந்த நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்நாடுகளின் இம்முடிபு இலங்கைக்கு இன்றைய சூழ்நிலையில் பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றது என்று நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று மேலும் சில நாடுகள இலங்கைக்கு வழங்கியுள்ள கடன்களை மீளப்பெறாமல் கடன்விடுப்பு வழங்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றன.

அத்துடன் சுனாமி அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிதியுதவி வழங்குவதாக பல்வேறு நிறுவனங்கள் உறுதி வழங்கியுள்ளன. இந்நிறுவனங்களின் உதவிகள் பெரும்பாலும் இலங்கைக்கும் கிடைக்கவுள்ளன.

இதேவேளை இலங்கைக்கு சுனாமி நிவாரண உதவியாக 25கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளதாகவும் அதுகுறித்து இந்தோனேஷிய மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளதாகவும நிதியமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-8)



'தகதிமிதா'
யுவகிருஷ்ணா - அங்கீதா

# 'பதவி படுத்தும் பாடு'

ஜி.எம்.மூவிஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்திற்குப் 'பதவி படுத்தும் பாடு' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை முதன் முறையாக மிகுந்த பொருட் செலவில் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கிறார் ஜி.மூர்த்தி.

இப்படத்தில் ரஞ்சித், வீரம் மிகுந்த கதாபாத்திரத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இவருடன் பிரமிட் நடராஜன், ரவிச்சந்திரன், செம்புலி ஜெகன் உட்பட பலர் நடிக்கின்றனர். மற்ற நடிகர், நடிகைகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

ஒருகொள்கை வீரனின் கதையை மையமாக வைத்து உருவாகும் இப்படத்தை சி.ராமலிங்கம் இயக்குகிறார். கதை, வசனத்தை 'துக்ளக்' சத்யா எழுத, ஒளிப்பதிவை பி.எஸ். செல்வம் கவனிக்கிறார். கும்மாளம் படத்திற்கு இசையமைத்த காந்திதாசன் இப்படத்திறகு இசையமைக்கிறார். பாடல்களை கவிஞர்கள் பா.விஜய், நா.முத்துக்குமார் எழுதியுள்ளனர்.

படத்தில் குறைந்தது இருநூறு முறையாவது வயிறு குலுங்க சிரிக்க வைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் படத்தின் திரைக்கதை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. குறுகியகாலத் தயாரிப்பாக உருவாகும இப்படம் தமிழ் புத்தாண்டு அன்று திரைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

## அகத்தியன் தயாரித்து இயக்கும் 'வேடந்தாங்கல்'

**தேசிய விருது பெற்ற 'காதல்கோட்டை', மற்றும் 'கோகுலத்தில் சீதை', 'வான்மதி', 'மதுமதி', தற்போது திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'ராமகிருஷ்ணா' போன்ற படங்களை இயக்கிய அகத்தியன் முதன் முதலாக படத் தயாரிப்பில் இறங்குகிறார்.**

## பாடல்களை மையமாக கொண்ட 'தகதிமிதா'

இசையால் வசமாகாத இதயம் எது? அதனால்தான் முழுக்க முழுக்க இன்னிசைப் பாடல்களை மையமாக வைத்து ஒரு மென்மையான காதல் படத்தை இயக்கி வருகிறார் சுந்தர்.சி. கதைக்கேற்ப இசையின் குறியீடாக 'தகதிமிதா' எனத் தலையங்கமும் வைத்திருக்கிறார் சுந்தர்.சி.

புதுமுகம் யுவகிருஷ்ணா, அங்கீதா, தேஜாஸ்ரீ இவர்களுடன் இரண்டாவது ஹீரோ எனச் சொல்கிற அளவிற்கு விவேக். இந்தப் படத்தில் இமான் இசையில் ஒன்பது பாடல்கள் இடம்பெறுகிறது.

2005இன் மென்மையான காதல் படமாக இது இருக்கும் என்றார் சுந்தர். சி. குத்துப்பாட்டு, கலக்கல்பாட்டு, காமெடிபாட்டு, காதல் பாட்டு, சுக பாட்டு, துக்கப்பாட்டு என ஒன்பது பாடல்களும் ஒன்பது ரகமாம்.

நாயகி அங்கீதா தெலுங்கில் சூப்பர் ஹீரோயின். கவர்ச்சியிலும், நடிப்பிலும் அங்கீதா கைதேர்ந்தவராம். அதனால்தான் தனது லண்டன் படத்திலும் பிரசாந்திற்கு ஜோடியாக அங்கீதாவையே நடிக்கவைத்திருக்கிறார். சுந்தர்.சி. ஹீரோ யுவகிருஷ்ணா ஏகப்பட்ட திறமைகாட்டியிருக்கிறாராம் படத்தில்!

---

*சுசிகணேசன் இயக்கும் 'சக்கர' படத்தில் ரீமாசென் நாயகியாக நடிக்கிறார்.

***ராமகிருஷ்ணா நாயகி ஸ்ரீ தேவிகாவுக்கு தமிழ் பேசவும் எழுதவும் தெரியுமாம்.**

*'பதவி படுத்தும் பாடு' படத்தில் அபிநயஸ்ரீ ஒரு பாட்டுக்கு ஆடியுள்ளார்.

*சுந்தர்.சி இயக்கும் 'சின்னா' படத்திற்கு இமான் இசையமைக்கிறார்.



'கண்ணாடிப்பூக்கள்'
பார்த்திபன் - மாஸ்ரர் அஸ்வின்

## சந்திரமுகி படப்பிடிப்பில் செல்போன்களுக்குத் தடை!

ரஜினி - நயன்தாரா, பிரபு - ஜோதிகா, நாசர், வடிவேலுவைத் தொடர்ந்து மேலும் மேலும் நட்சத்திரக் கூட்டம் சந்திரமுகியில் சங்கமித்தபடியே இருக்கிறது.

செம்மீன் ஷீலா, கே.ஆர்.விஜயா, வினீத், சொர்னா, சுஜிபாலா ஆகியோரும் நடித்துவருகிறார்கள். சந்திரமுகி படப்பிடிப்பில் நடக்கிற விஷயங்கள் அவ்வப்போது சுடச்சுட வெளியேறிக்கொண்டே வந்தன. இது எப்படி? என ரஜினி தரப்புத் துப்பறிந்தபோது,

படப்பிடிப்பில் கலந்து கொள்பவர்கள் செல்போன் மூலம் தகவல் பாஸ் பண்ணுவது தெரிய வந்தது. இதையடுத்து பட்ப்பிடிப்பு தளத்திற்குள் செல்போன் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. முன்பெல்லாம் படப்பிடிப்பு இடைவேளைகளில் ஜாலியாக அரட்டை அடித்துக்கொண்டிருப்பாராம் ரஜினி. சந்திரமுகி படப்பிடிப்பு இடைவேளைகளில் ஓஷோ புத்தகங்களை ஆழந்து படித்துவருகிறாராம்.

---

**காதல் திருடாவில் கவுண்டமணி நடிக்கிறார்.**

---




'கண்ணம்மா'
மீனா

## ரஜினியின் முடிவு

பாபாவுக்குப் பின் நீண்ட இடைவெளி விட்டு சந்திரமுகியில் நடிக்கிறார் ரஜினி. இந்தப் படம் முடிந்ததும் வருடத்துக்கு ஒன்று இரண்டு என அடுத்தடுத்து தொடர்ந்து படங்களில் நடிக்க முடிவு செய்துள்ளார்.



மகி
தி
கு
யத்தூரும்
இட்ட
யாய சம்பா
ராமகிருஷ்
தப் பாசமு
தாய
வருத்துகிற
புரட்ட உ
முகவரி. அங்கு ஏழை வாலிபனாகச்
ஊர் பெரியவர் ராமசாமியிடம் வே
மக்கள் அன்பில் நெகிழ்கிறான்.
ஒரு கட்டத்தில் பாழடைந்த வீ
போது அங்கு அவன் தாயின் போட்டோ
அடைகிறான்.
ராமசாமி தனது தந்தை என்ற வி
வருகிறது. ராமகிருஷ்ணாவை ஊரறிய ம
சாமி சம்மதிக்கிறார். சொந்த பந்தங்க
ணாவை மகன் என்று அடையாளம் காட்ட
பால் சாகிறார்.
ராமகிருஷ்ணாவை ஊரைவிட்டு
முடிவெடுக்கையில் ராமசாமி மனைவி
உண்மை தெரிகிறது. ராமகிருஷ்ணாவை
கிளைமாக்ஸ்.
ராமகிருஷ்ணாவாக ஜெய் ஆகாஷ்
தோற்றத்தில் ஒளிர்கிறார்.
ஆஸ்பத்திரியில் சுயநினைவின்றி இ
'அம்மா உன்னை விட்டா எனக்கு யார்
குரலில் புலம்பி அவரை நினைவுக்குக்
ழ்ச்சி. கிராமத்தில் மாடுமேய்க்கும் வே
இரு பெண்களிடம் காதலில் அ
பளிச். கிராமத்தில் பூட்டிக்கிடந்த ப
படத்தைப் பார்த்து அழும்போது உருக்க
யென்று அறிந்ததும் மகனாக ஏற்றுக்கொ
சுவது ஏக்கம். ஊராரிடம் தன்னை ம
முன் தந்தை சாவதைப் பார்த்து கல
முத்திரை பதித்திருக்கிறார்.
பூஞ்சோலையாக வரும் ஸ்ரீதேவி
விழிகளில் வசீகரம். ஜெய்ஆகாஷைக்
செய்யும் சில்மிஷங்கள் இளசுகளுக்கு சு
நாயகி வாணி கவர்ச்சி விருந்துபடை
வில்லனாகவரும் ஜாகுவார் தங்க
மின்னுகிறார். கிளைமாக்ஸ் சிலம்பு ச
சார்லி, முத்துக்காளை கா வ
வைக்கிறது. உருவம் இல்லாத மாடு,
குதிரைகளை ஓட்டி வந்து சார்லியிட
அபேஸ் செய்யும் முத்துக்காளையின் நகைச்



விஜயகுமார், சிசர்மனோகர், ரோ
சரண்யா, மனோசித்ரா, பரவை முனியம்மா,
என ஒவ்வொருவரும் மனதில் நிற்கும் பாத்
அழவைக்கிறது.
தேவா இசையில் 'விருப்பமில்லையா
வெண்ணிலவே', 'பெய்யும் மாலம்மா' பா
பணத்தைவிட உறவுகள்தான் உயர்ந்தது
வமாக சொல்லி உள்ளார் இயக்குனர்

# நீதியான வாழ்வைக்கடைப்பிடித்து தேவனின் அன்பைப் பெறுவோம்

பாசத்தின் உறவுகளை இழந்து தேசமே சோகமுற்றிருக்கும் இவ் வேளையிலே 2005 ஆம் ஆண்



டைச் சந்தித்துள்ளோம். இயற்கையின் கோபாவேசத்தினால் பல்லாயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இவர்கள் அத்தனை பேரும் பாவிகளா???, இல்லை. ஆனால் உலகம் கடவுளை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கின்றது. மனிதன் கடவுளுககுச் சமனாகத் தன்னை எண்ணத் தலைப்பட்டுவிட்டான். தேவகோபத்தை நாம் அறிய முடியாது. இறைவனுக்கு ஒரு நொடிப் பொழுதில் எல்லாவற்றையும் ஆக்கவும், அழிக்கவும் சக்தியுண்டு என்பதை வேதம் தெளிவாகவே கூறியுள்ளது. ஆனால் மனிதன் தான் இதனை உணர மறுக்கின்றான்.

ஆதியிலே பா்பேல் கோபுரம் கட்டி இறைவனை காணப் புறப்பட்டான். மனித திட்டம் பொடிப் பொடியானது. மொழிக் குழப்பம் ஏற்படவே சிதறுண்டு மக்கள் வேறு இடங்களுக்கு ஓடினர். தோவாவின் காலத்தில் மக்களின் பாவம பெருகி வெள்ளப் பெருக்கினாலே மக்கள் அழிந்து போயினர். சிற்றின்பமும், காம வெறியும் பாவமாகப் பெருகி சோதோம், கொமறா என்ற இருபட்டினங்களுமே முற்றாக அழிக்கப்பட்டன. இவ்வாறு இறைவனை மதிக்காத மக்கள் கூட்டம் பெருகத் தொடங்க இறைவன் இயற்கையினாலே

## பரமபிதா காட்டிய பாதை

எம்மை எச்சரிக்கின்றான் என்பதே வெளிப்பாடாக உள்ளது. வாழ்கின்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையே இயற்கை அனர்த்தங்களின் அழிவாகும்.

### மனுக்குலமே சற்று சிந்தி

மனித குலம் பல வேளைகளில் சகோதர மனிதனை அடிமைப் படுத்த முனைவதன் விளைவாகவே வன்முறைகளும் போர்களும் இதனாலே அநியாயங்கள், அக்கிரமங்கள், அடக்குமுறைகள் தலைதூக்குகின்றன. இவையெல்லாம வாழ்வின்,வாழ்வியல எனறு மனிதன் மாறத் தலைப்படுகின்றான். நீதியோடு வாழ்கின்றவர்கள் இவற்றை வெறுக்கின்றார்கள். இறைவனிடம் முறையிடுகின்றார்கள். ஆனால் இறைவன் உடனடியாகப் பதில் தருவதில்லை.

உயிர்களை மதியாமல் மனித அட்டூழியங்கள் உலகிலே தொடரும் போது இறைவன் அழிவுகளை அனுமதிக்கின்றான் என்பதை பழைய சம்பவங்கள் பலவாறு எடுத்துக் கூறியிருக்கின்றன. போர் ஏற்படப் போகும் பீதியிலே கலங்கியிருந்த மக்களுக்கு இயற்கை அனர்த்தம் எண்ணிலடங்கா சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கரையோர மக்களைக் கதிகலங்கப் பண்ணியுள்ளது. வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு, உறவுகள், உடமைகள் பறிக்கப்பட்டு ஏதிலிகள் ஆக்கப்பட்டுவிட்டனர். எல்லோரின் பாவங்களுக்காய் இயேசு பலியாக்கப்பட்டது போல் ஏதும் அறியாப் பச்சிளம்பாலன்கள், பெண்கள்,இளைஞர்கள், வயோதிபர்கள் யாவரும் பலிகொள்ளப் பட்டிருக்கின்றார்கள்.

வாழபவர்கள் எமக்கு வலிந்த இறைவன். ஓர் பாடத்தைக் கற்பிக்கின்றான். வன்முறை நீக்கி அன்புச் சமுதாயம் மலரவேண்டுமென்று இனியாவது எமது கல்லான மனங்களை மாற்றிக் கொள்வோம. ஆண்டவன் வார்த்தைக்கு உகந்த மக்களாக வாழ்வோம்.

### வேதம் கூறும் படிப்பினைகள்

மனித போட்டிகள் உலகியலில் பாத்திரமல்ல ஆண்மீக ரீதியிலும ஏற்படும். இயேசுவின் பெயரை வைத்துக் கொண்டு பலர் தாமே அந்த இயேசு என்று கூறுவார்கள்'. அவர்களிடம் ஏமாந்து போகாதீர்கள் என்று இயேசு தாமே தம் சீடர்களுக்கு கூறிவைத்துள்ளார். ''போர் முழக்கங்களையும் குழப்பங்களையும் பற்றிக் கேள்விப்படும் போது திகிலுறாதீர்கள். நாடு நாட்டையும், அரசு அரசையும் எதிர்த்து எழும் பெரிய நில நடுக்கங்களும், பல இடங்களில் பஞ்சமும், கொள்ளை நோயும் ஏற்படும். அச்சுறுத்தக் கூடிய பெரிய அடையாளங்களும் வானில் தோன்றும்' (லூக் 21: 9-11)

இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்னர் இவ்வாறான கலக்கங்கள் மக்களை ஆட்கொள்ளும் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தேவனின் கோபத்துககு ஆளாகாமல் அன்பும் நீதியுமுள்ள வாழ்வைக் கடைப்பிடிப்போம்.

**அன்ரனி பீற்றர்**

### நல்லன சிந்திப்போம்

பிறந்துள்ள புத்தாண்டிலே புதுவாழ்வு எல்லோருக்கும் நன்மை செய்வதிலே கருத்தாய் இருப்போம். அநியாயச் சொத்துச் சேர்த்து அடுத்தவரை நிர்க்கதிக்காளாக்காமல் ஆண்டவனின் வார்த்தைகளுக்கு அடிபணிவோம. சமுகத்தன் நன்மைக்காக உழைக்க முன்வருவோம். நம்மிலும் கீழ்ப்பட்டவர்களின் வாழ்வுயர எம்மாலியன்றவரை கைகொடுத்துதவுவோம். நற்செயற்பாடுகள் உருவாகவும் நற் சமுதாயம் மலரவும் புத்தாண்டில் திடசங்கற்பம் பூணுவோம். □


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன பெரிய ஆட்டுக் கடா விற்பனைக்கு உண்டு. தொடர்பு (20, கொழும்புத்துறை, வீதி, சுண்டுக்குளி) ( C/952)

### வேலையாட்கள் உடன் தேவை

பிஸ்கட் தயாரிப்பதற்கும் பொதி செய்வதற்கும் ஆட்கள் தேவை (ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்பு : மெரீன் பேக்கவுஸ், ஆனைக்கோட்டை சந்தி
T.P 021 222 7790 ( C/953)


## நூல்கள் விநியோகம்

சுவாமி யோகேஸ்வராநந்தாஜின் ஆங்கில மற்றும் தமிழ் நூல்களைப் பாடசாலை மாணவர்கள் படிப்பதற்கு அவ்வப் பாடசாலை நூல் நிலையங்களுக்கு விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும். க.சிவலிங்கம், பத்மாலயம், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். T,P : 222 -6331 ( 9219)

## கூட்டம்

ஊர்காவற்றுறை மறைமாவட்ட புனித-மரியாயின் சேனையின் பரலோக இராக்கினி பிரசீடியத்தின் வாராந்தக் கூட்டம் தற்பொழுது புதன்கிழமை தோறும் மாலை 4.00க்கு புனிதமரியாள் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருவதாக பக்குத்தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாசம் அடிகள் அறிவித்துள்ளார்.(க)

## நியமனம்

உடுவில் பிரதேச செயலர் சி.திருபாகரன் பருத்தித்துறை பதில் பிரதேச செயலராக நியமிக்கப் பட்டுள்ளார். பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலராக வசந்தகுமார் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# சர்வதேச சமூகத்தின் அனைத்து உதவிகளும் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவானது பாராட்டத் தக்க விடயமாகுமென ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழனன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்பினை மதிக்கும் வகையில், அவர்கள் வழங்கிய உதவியினை ஒழுங்கான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பக்கச்சார்பின்றி வழங்கவேண்டும்.

சர்வதேச சமூகம் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறது. அந் நாடுகள் வழங்கி வரும் உதவிகளைக் கொண்டு உசசப்பயனை அடையவேண்டும்.

மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் விசேட செயற்றிட்டம் ஒன்று உருவாககப்பட்டு அது சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு, ஒழுங்கான வரையறைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த விடயங்கள் பொது மக்களுக்கு கட்டாயம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், அரசாங்கம், எதிர்க் கட்சிப் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், தொண்டர் நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ற-4)

# மேலும் 8 கோடி டொலர் நிதியை ஜப்பான் இலங்கைக்கு வழங்கும்

(கொழும்பு)

ஜப்பான் அரசு இலங்கையில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக மேலும் 8 கோடி டொலர்களை உதவியாக வழங்கவுள்ளது.

பு,கம்பப் பேரவைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்நிதி வழங்கப்படுவதாக ஜப்பானியப் பிரதமர் ஜீனிச் சீரோ கொய்சுமி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்தோனேஷியாவில் நடைபெற்ற சுனாமி மாநாட்டில் இவ் உதவித் தொகையை அறிவித்தாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் அரசு இவ் உதவிகளுக்கு மேலதிகமாக 1கோடி டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியான உபகரணங்களையும் பொருட்களையும் வழங்கியுள்ளது. உலக உணவுத் திட்டத்தினூடாக 2 ஆயிரத்து 400 மெட்ரிக் தொன் அரிசியையும் இது வழங்கியிருக்கிறது. அத்துடன், ஜப்பானிலிருந்து அனர்தத சேவைக்கான மருத்துவக் குழுக்களும் இலங்கை வந துள்ளன.

கடல் பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட அழிவுகளுக்கும் உயிர் இழப்புக்களுக்கும் ஜப்பான் அரசும மக்களும் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக ஜப்பானியத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-7)

# அடையாள அட்டை வழங்க விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

சுனாமி பேரவையினால் பாதிக்கப்பட்டு அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு உடனடியாகப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான விசேட செயற்றிட்டமென்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் குறித்து வெகு விரைவில் அறிவக்கப்படுமென்றும் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் டி.பி.அபயக்கோன் தெரிவித்தார்.

கடல் அனர்த்தத்தினால் ஆவணஙகளை இழந்தவர்களுக்கு விசேட வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், அவ்வாறு அவர்கள் முடிந்த அளவு ஆவணங்களை சேகரித்துக் வைத்துக கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (ற-8)

# பூமியதிர்ச்சியற்ற வலயமாக இனிமேல் இலங்கையைக் கருத முடியாதாம்

(கொழும்பு)

இலங்கையை பூமியதிர்ச்சி தாக்காத நாடாக இனிமேலும் கருத முடியாதென் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சீ. பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்தீவு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அதிர்வுகளின் தாக்கம் அதிகமில்லாத நிலத்தட்டில் அமைந்திருந்ததாக அவர் கூறினார்.

ஆனால் இமய மலைச் சாரலிலுள்ள முகடுகள் தரும் அழுத்தம் காரணமாக இலங்கை அமைந்துளள நிலத்தட்டில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதனால் நில நடுக்கத்தின் தாக்கம் ஏற்படக் கூடிய வாய்ப்பு இலங்கைக்கு உருவாகியுள்ளதெனவும் பேராசிரியர் திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் பூமியதிர்ச்சி ஏறபடக்கூடிய சாத்தியக் கூறுகள உள்ளதால் அரசும், பொது மக்களும் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும். தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்யககூடிய அபாய அறிவிப்பு இயநதிரங்களையும் உரிய நேரத்தில் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

(கந்தர்மடம்)

புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தினர் 'சுனாமி' கடல் அலையினால் பாதிக்கப் பட்டு முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

முதல் கட்டமாக உடுப்பிட்டியில் உள்ள பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

தொடர்ந்தும் ஏனைய முகாமகளில் உள்ளவர்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கப் போவதாக அந் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

(க-112)

## நிதியுதவி

(துன்னாலை)

வடமராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட அதிபர்கள் ஆசிரியர்கள்களுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக கூட்டத்தில் கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு அதிபர், ஆசிரியர்கள் தமது சம்பளத்தில் குறிப்பிட்ட தொகையை வழங்கத் தீர்மானித்தனர் கடந்த டிசமபர் மாதம் வழங்கப்பட்ட அதிகரித்த சம்பளக் கொடுப்பனவை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்க இணக்கம் கண்டனர்.

இக கூட்டத்தில் தமிழர் ஆசிரியர் சஙகச் செயலாளர் மற்றும் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த-101)

# ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் புலிகளின் தலைமையையும் சந்திக்க வேண்டும்

## வலியுறுத்தி மகஜர்கள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

**'சுனாமி' கடல் அனர்த்தத்தினால் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான மக்களும் சொத்துக்களும் அழிந்து [illegible]யுள்ள நிலையில் கொழும்புக்கு வருகை தந்துள்ள ஐ.நா.செயலாளர் நாயகம் கோபிஅனான் வடக்கு- கிழக்கில் மோசமான அழிவினைச் சந்தித்துள்ள பகுதிகளையும் வந்து பார்வையிட்டு விடுதலைப் புலிகளின் தலைமையினைச் சந்தித்துப் பேசவேண்டுமென பலதரப்பட்டோராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

இது விடயம் குறித்து தென்னிந்தியத் திருச்சபை பேராயர் வண.எஸ்.ஜெபநேசன் அடிகளாரும், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் சர்வதேச் இந்துமத குருமார் ஒன்றியம் ஆகியனவும் இலங்கைக்கான ஐ.நா. செயலகத்திற்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். அவற்றின் விபரம் வருமாறு,

### தென்னிந்திய திருச்சபை பேராயர்

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கோபி அனான் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வராமல் தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொள்ள நினைப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தென்னிலங்கையை விட வட-கிழக்கு மாகாணமே சுனாமி அனர்த்தத்தில் மிகவும் பாதிப்படைந்துள்ளது. ஐ.நா. பொதுச் செயலர் உலகின் எந்தப் பகுதியிலும் எந்த அனர்த்தம் நடந்தாலும் அரசியல் வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அழிக்காமல் மக்களின் இன்னல் போக்க முன்வரவேண்டும்.

முன்னரும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரமுயற்சித்த ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் அரசியல் அழுத்தங்கள் காரணமாக அந்த விஜயத்தை இரத்துச் செய்திருந்தார்.

இன்று தமிழ் பேசும் மக்கள் கண்ணீர்க் கடலில் மிதக்கின்றனர். ஐ.நா.செயலர் அம்பாந்தோட்டையையும், காலியையும் பார்த்து விட்டுத் திரும்பிவிட முனைவது கவலைக்குரிய விடயமாகும். அவர் எப்படியாவது தமிழ்ப் பகுதிகளுக்கும் வந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் செல்வதுடன் புலிகளின் தலைமையினைச் சந்திக்க வேண்டும்.

முழு இலங்கையையும் பாருங்கள்! எங்கே என்ன நடக்கிறது என்று அவதானியுங்கள் என்று இரந்து கேட்டுள்ளேன்.

அத்துடன், முன்னாள் செயலாளர் பீற்றோஸ் காசியின் பெருந்தன்மையையும் ஞாபகமூட்டியுள்ளேன்.

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

இலஙகைத் தீவில் கடல்கோள இயற்கை அனர்த்தத்தினால் பெருமளவிலான மக்களும், பெருந்தொகையான சொத்துக்களும் அழிந்து போயுள்ள நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யும் செயலாளர் நாயகம் வடக்கு-கிழக்கில் மோசமான அழிவினைச் சந்தித்துள்ள பகுதிகளையும் வந்து பார்வையிட்டு செல்வதனை ஆவலோடு வரவேற்கின்றோம. இயற்கை அனர்த்தத்தினால் அதிகமான பாதிப்பு வடக்கு-கிழக்கில் வாழ்ந்து வரும் மக்களுக்கே ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களே மிகவும் மோசமான அளவிற்குப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இந்நிலையினை நேரில் பார்வையிட ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தயங்குவார் ஆயின் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் கவலை அளிக்கும் செயலாகவும் தமிழ் மக்களை ஐக்கிய நாடுகள் சபை புறக்கணிக்கின்ற செயலாகவுமே அமைந்து விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அத்துடன், தமிழ் மக்களுக்காக தமிழ்மக்களைப் பாதிப்புக்களில் இருந்து மீட்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளையும் புறக்கணிக்கின்ற செயற்பாடாக அமையுமெனவும் நாம் கருதுகிறோம்.

எனவே, நீண்ட கால யுத்தத்தின் கொடூரங்களால் அழிந்து போயுள்ள எமது வடக்கு-கிழக்குப் பிரதேசம் மீண்டும் மறுமலர்வு அடைந்து வந்த போது இயற்கையின் சீற்றத்தால் மீள முடியாத அளவுக்குச் சிதைந்து போயுள்ளது.

எனவே, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபிஅனானின் வருகையினை வடக்கு-கிழக்கு மக்களாகிய நாங்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்பதோடு, அவர்களது வருகை எந்தவிதமான பக்கச்சார்பற்ற அளவீடாக அமையும் என்பதில் பெரு நம்பிக்கை கொண்டுள்ளோம்.

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்டுள்ள பேரழிவினைப் பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள தங்களை இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பாக நன்றியுடன் வரவேற்கின்றோம்.

தங்களது இவ் விஜயமானது இன, மத, பேதமின்றி எமது நாட்டில் பாதிப்புக்குள்ளான மக்களுக்குரிய நிவாரண செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மிகவும் அவசியமானதாகவே நாம் கருதுகின்றோம். வடக்கு-கிழக்கு குறிப்பாக வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் பேரழிவைச் சந்தித்துள்ளன. அப்பகுதியில் பாதிப்புக்குள்ளான மக்கள் சர்வதேச நாடுகளின் உதவியை எதிர்பார்த்து கையேந்தும் இவ்வேளையில், தங்களின் இவ் விஜயமானது மிக முக்கியமானதாகவும் பாதிக்கப்பட்டுள்ள எம் மக்களுக்கு மன ஆறுதலாகவும் உள்ளது.

ஆகவே, வன்னி மாவட்டம் உட்பட சகல இடங்களையும் தாங்கள் சென்று பார்வையிடவேண்டும் என்பதனை பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் தங்களின் இவ் விஜயமானது எமது நாட்டில் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்கும் எனவும் நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம். (ற-4)

## மருதங்கேணி உ. அ. அ. பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிப்பு

### நடவ்டிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என ஆட்சேபித்து இது விடயம் குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில் விபரம் வருமாறு,

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பட்டதாரி பயிலுநர்களாகிய எமக்கு கல்வி அமைச்சில் மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளமையை திறைசேரியின் இணையத்தளத்தின் ஊடாக அறிய முடிகின்றது.

எமது பிரிவு பட்டதாரி பயிலுநர்களில் முகாமைத்துவம்,வர்த்தகம், விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், கலை (சிறப்பு), கலை(பொது) ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் உள்ளனர்.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு அவர்களின் துறைகளுக்கு ஏற்ப பல்வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் எமது பிரதேச பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் துறை சார்பாக எவ்வித கவனமும் செலுத்தப்படாமல் கல்வி அமைச்சு மட்டுமே நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதானது பாரபட்சமானதும் நியாயமற்றதுமான ஒரு நடைமுறையாகும்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த எமக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளவாறான முறையில் நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களை பணிவுடன் வேண்டுகின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. (ற)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்மகர்த்த சபையின் செயலாளரும், சைவசமய அபிவிருத்திக் கழக அமைப்பாளரும், பரீட்சை செயலருமான சைவப்புலவர் வ.கந்தசாமி மிகவிரைவில் வெளி நாடு செல்லவுள்ளார்.

இவர் தாம் பதவிவகித்த ஆலயங்கள், கழகங்கள், மன்றங்கள் ஆகியவற்றுக்காக மட்டுமல்லது, நம் மண்ணில் தமிழும் சைவமும் மேலோங்கி வருவதற்கு அரும்பாடுபட்டுழைத்த, உழைக்கின்ற ஒரு சைவப் பெரியாராகும்.

இந்த வகையில் அவரைக் கௌரவிப்பது பற்றி சம்பந்தப்பட்ட யாவரும் ஒன்றிணைந்து கலந்தாலோசிப்பதற்கான கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## இலவச பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவிநாயகப் பெருமான் தேவஸ்தானத்தில் ஆலயபரிபாலன சபையினரின் அனுசரணையுடன் பிரதி சனிக்கிழமைகளில் பிப. 4.30 மணி முதல வட இலங்கை சங்கீத சபையினரின் பாடவிதானத்திற்கமைய இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பை நடாத்தி வருகின்றது.

இப் பயிற்சி வகுப்பை தேவார இசைமணி, கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார்மூர்த்தி நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் இலவசப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பில் அனைவரும் பங்குபற்றலாம். (ற)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் வாராந்த ஆன்மீக சொற்பொழிவு தொடரில் இன்று காலை 10.00 மணியளவில் 'அருளுரை' என்னும் விடயம் பற்றி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார். (க-35)

## மீள்கட்டமைப்பு நிர்மாணப் பணிகளுக்காக யாழில் கூட்டு செயலணி அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும் சகஜ நிலைமையை மீண்டும் கொண்டுவருவதற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதற்கமைய சகல திணைக்களங்கள் மற்றும் சபைகளை உள்ளடக்கிய கூட்டுச் செயலணி ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை மின்சாரசபை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கும் மாவட்ட சுகாதாரத் திணைக்களம் தொற்றுநீக்கி மருந்துகளை தெளித்தல் , நோய்கள் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் வடிகால் அமைபபுக்களை மறுசீரமைத்தல் போன்றவற்றுக்கும் நீர் வடிகால் அபிவிருத்தி சபையின் உதவியுடன் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் உணவுத்திணைக்களம், வீதி அதிகாரசபை, உள்ளூராட்சித் திணைக்ளம்,பிராந்திய திட்டமிடல் பணிமனை, ஆட்பதிவுத்திணைக்களம் போன்றவற்றின் உதவியுடனும் இச்செயலணி உருவாக்கப்படவுள்ளது.

இச்செயல்ணி எதிர்வரும் வாரத்தில் கூடவுள்ளதாக யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-5)

## மனைவியைக் காணவில்லையென கணவன் ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற குடும்பப் பெண்மணி ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லையென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி பொருட்கள் வாங்கி வருவதற்காக கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற தனது மனைவி இதுவரை வீடு திரும்பவில்லையென செல்லத்துரை என்பவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். பலாலி வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த செ.சாந்தினிதேவி (வயது42)என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார். (ற-5)



# ...மகிருஷ்ணா

## திரை விமர்சனம்

குடும்ப உறவுகளின் முக்கி யத்துவம் சொல்லும் படம்.

...ட்டினத்தில் கோடி கோடி ...யாய சம்பாதித்து ஆடம்பரமாய் வாழும் ராமகிருஷ்ணா தாயைத் தவிர எந் தப் பாசமும் அறியாதவன்.

தாய் இறந்ததும் தனிமை வருத்துகிறது. அவள் டைரியைப் புரட்ட உள்ளே ஒரு கிராமத்தின் ...ழை வாலிபனாகச் செல்கிறான்.

... ராமசாமியிடம் வேலைக்குச் சேர்ந்து கிராம ... நெகிழ்கிறான்.

...தில் பாழடைந்த வீட்டைச் சுத்தம் செய்யும் ...ன் தாயின் போட்டோவைப் பார்த்து அதிர்ச்சி

...து தந்தை என்ற விவரம் அவனுக்குத் தெரிய ...ஷ்ணாவை ஊரறிய மகனாக்கிக்கொள்ள ராம ... சொந்த பந்தங்களைக் கூட்டி ராமகிருஷ் ...று அடையாளம் காட்ட முற்படுகையில் மாரடைப்

...ாவை ஊரைவிட்டு வெளியேற்ற பஞ்சாயத்து ... ராமசாமி மனைவிக்கு அவனைப் பற்றிய ...து. ராமகிருஷ்ணாவை ஏற்றார்களா என்பது

...வாக ஜெய் ஆகாஷ் -கச்சிதம். பணக்காரத் ...ர்கிறார்.

...ில் சுயநினைவின்றி இருக்கும் தாயின் காதில் ...விட்டா எனக்கு யார் இருக்கா' என்று அழுத ...வரை நினைவுக்குக் கொண்டுவருவது நெகி ... மாடுமேய்க்கும் வேலை பார்ப்பது பரிதாபம். ...ளிடம் காதலில் அப்பாவித்தனம் காட்டுவது ... பூட்டிக்கிடந்த பங்களா வீட்டில் தாயின் ... அழும்போது உருக்கம்... ராமசாமி தந்தை ... மகனாக ஏற்றுக்கொள்வீங்களா என்று கெஞ் ...ராரிடம் தன்னை மகன் என்று அறிவிக்கும் ...வதைப் பார்த்து கலங்குவது என நடிப்பில் ...ருக்கிறார்.

...யாக வரும் ஸ்ரீதேவிகா செதுக்கிய சிலை. ... ஜெய்ஆகாஷைக் காதலில் வீழ்த்த அவர் ...கள் இளசுகளுக்கு சுவாரஸ்யம். இன்னொரு ...வர்ச்சி விருந்துபடைத்திருக்கிறார்.

...நம் ஜாகுவார் தங்கம் சிலம்பு ஆட்டத்தில் ...ளமாக்ஸ் சிலம்பு சண்டை திகில்....

...துக்...ளை கா... வயிறு குலுங்கச் சிரிக்க ...வம் இல்லாத மாடு, உருவம் இல்லாத ...டி வந்து சார்லியிடம் விற்றுப் பணத்தை ...ந்துக்காளையின் நகைச்சுவை காமெடி ரகளை.



...சிசர்மனோகர், ரோகித், அல்வா வாசு, ...ா, பரவை முனியம்மா, வெங்கய்யா பாலன் ... மனதில் நிற்கும் பாத்திரம். கிளைமாக்ஸ்...

...ில் 'விருப்பமில்லையா', 'தத்தித்தாவிடும் ...ய்யும் மாலம்மா' பாடல்கள் இனிமை.

...றவுகள்தான் உயர்ந்தது என்பதை உணர்வு ... உள்ளார் இயக்குனர் அகத்தியன்.

## சினிமாச் சிதறல்

ஸ்வர்ணமால்யாவின் கை இப்போது ஓங்கியிருக்கி றது. ஜோஷி இயக்கத்தில் மாம்பழக் காலம் (மலையாளம்) அதாவது தமிழில் 'ஸாரி என க்கு கல்யாணம் ஆயிடுச்சி' என்ற படத்தில் நடித்து வரு கிறார்.

* * *

'அப்பா, அம்மா, செல்லம்' என்ற படத்தில் நடிப்பில் கலக்கியி ருக்கும் சாயாசிங் இனி கவர்ச் சிக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன் என்று முடிவெடுத்துள் ளார்.

உடம்பு முழுக்க புடவை கட்டி நடிக்கவே ஆசை என்கிறார் சாயா. சபாஷ் சரியான முடிவுதான் இது பனிக்காலமாச்சே!

* * *

வினயன் இயக்கத்தில், தெலுங்குப் படம் ஒன்றில் நதி யாவுக்கு தந்தையாக நடிக்கி றார் சரத்குமார். தந்தை கரக் டரே தனக்கு மிகவும் பொருத்த மான கரக்டர் என்று நெகிழ்ந்து கூறுகிறார்.



'பெஸ்ட் ஃபிரெண்ட்' எஸ்.ஜே.சூர்யா - நிலா

# 'அப்பாவுடன் நடிப்பது பலம்'

## சிபிராஜ்



'எங்கப்பாவுடன் நடிப்பது எனக்குப் பலம்' என்று கூறும் நடிகர் சிபிராஜ் 'ஸ்டூண்ட் நம்பர் 1' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர். இவர் நடிகர் சத்யராஜின் மகன். இவர் தனது தந்தையுடன் 2ஆவதாக நடித்த 'ஜோர்' படமும் பெரிய ஹிட் ஆனதைத் தொடர்ந்து இந்த வெற்றி ஜோடிகள் இப்போது 'பெருமாள்சாமி', 'மண்ணின் மைந்தன்' உட்பட அடுத் தடுத்து நாலு படங்களில் தொடர்ந்து நடித்து வருகின்றனர்.

இதுபற்றி மேலும் அறிந்து கொள்வதற்காக நடிகர் சிபிராஜிடம் கேட்டபோது அவர் அளித்த பதில்கள் இதோ:-

**உங்களது அப்பாவுடன் தொடர்ந்து நடிப்பதால் உங்க ளுக்குப் பலமா? பலவீனமா?**

பலம் என்றுதான் சொல்வேன். ஒவ்வொரு காலகட் டத்திலும் ஒருஜோடி வெற்றி பெறும். சிவாஜி - பிரபு, சத்திய ராஜ் - பிரபு, கமல் - ரஜினி என்று இணைந்து நடித்த பல படங்கள் மாபெரும் வெற்றி அடைந்துள்ளது. அது போலத் தான் நானும் அப்பாவும் இணைந்து நடித்து வருகிறோம். அத னால் அப்பாவுடன் இணைந்து நடிப்பது எனக்குப் பலம்தான்.

**இவ்வாறு நடிப்பது உங்கள் தனித்தன்மையைப் பாதிக்காதா?**

கண்டிப்பாக பாதிக்காது. ஜோர் படத்தில் அவருடைய லொள்ளும் எனது நடிப்பும் சேர்ந்து ரசிகர்களுக்கு ஒரு கலகலப்பான அனுபவமாக இருந்தது. அதையே தொடர்ந்து தரவிருக்கிறோம்.

**நீங்கள் யாரை போட்டியாளராகக் கருதுகிறீர்கள்?**

நான் யாரையும் போட்டியாளராக நினைக்கமாட்டேன். யாரும் யாருக்கும் போட்டியும் இல்லை.

**நீங்கள் எப்படிப்பட்ட கதாநாயகன்?**

நான் இமேஸ் என்ற வட்டத்தில் சிக்கிக்கொள்ள விரும்ப வில்லை. எனக்கு நல்ல கதையம்சம் உள்ள படங்களாக அமைந்தால் போதும். நிச்சயம் நடிப்பேன்.

**உங்களுக்கு போட்டியே என்னுடைய அப்பாதான் என்று சொல்லியிருக்கிறீர்களே?**

ஆமாம்! 'அடிதடி' படத்தில் அவர் 'உம்மா உம்மம்மா' பாடலில் ஆடிய ஆட்டம் என்னை வியக்க வைத்தது. அவரது நடிப்பும் சூப்பர்! அவர் நடித்த படங்களை நானும் பார்த்து சில விஷயங்களைக் கற்றுக்கொள்வேன்.

**உங்களுக்குக் கல்யாணம் எப்போது?**

இன்னும் நான் ஒன்றும் சாதிக்கவில்லை. 22 வயசிலே கல்யாணம் செய்து 24 வயசிலே பிள்ளையை பெத்துக்கிட்டு வாழ்கின்ற ஒரு வாழ்க்கையை நான் நடத்த விரும்பவில்லை. திருமணத்திற்கு இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கிறது.


**நீங்கள் காதலிக்கிறீர்களா?**

காதலிக்க நேரமில்லை என்று சொல்லமாட்டேன். தற் போதைக்கு கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் கிடைத்தா லும் கிடைக்கலாம்.

**சைட் அடிக்கிற பழக்கம் உண்டா?**

சைட் அடிப்பது தான் எனது தொழில்! ஓய்வு கிடைக்கும் நேரங்களில் இதுதானே எனது வேலை!

இவ்வாறு அவர் கூறினார்.



'அந்தநாள் ஞாபகம்' ...ணா - ஸ்ரீதேவிகா

# தமிழர் மீதான அரசின் புறக்கணிப்புகளுக்கு

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

'சுனாமி' கடற்கொநதளிப்பினால தமிழர் தாயகப் பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டும் இப்பகுதிகளில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் சர்வதேச நாடுகள வழங்கிவரும் மனிதாபிமான உதவிகள் தமிழர் பகுதிகளைச் சென்றடையாமல் தடுத்துக்கொண்டிருக்கும் அரசு தொடர்ந்தும் இனவாதத்தையும் புறக்கணிப்பையும் தமிழ் மக்கள் மீது திணிக்க முயற்சிப்பதை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுவிடயம் குறித்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

நீண்டகாலமாக ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டு துன்பப்பட்ட எம்மக்கள் தொடர்ந்தும் உயர் பாதுகாப்புவலயம் எனும் இராணுவ அழுத்தங்களால் தமது இயல்புவாழ்வை இழந்து நிர்க்கதி ஆக்கப்பட்டனர். இவ்வேளையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் பலம் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட போர் ஓய்ந்த சமாதான சூழலில், தமது வாழ்வாதாரத்தினை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சித்துக் கொண்டிருந்தவேளையில், சுனாமி கடல் அலைகளினால் தமிழ்மக்கள் தமது உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து இருப்பிடம் இழந்து இன்று மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசோ உதவிகளை செய்யாமல மாறாக உலக நாடுகளால் வழங்கப்படும் உதவிகளையும் தமிழர் பகுதிகளை சென்றடையாமல் தடுத்துக்கொண்டிருக்கிறது. தமது இனவாதத்தையும் தமிழர் புறக்கணிப்பையும் பாதிக்கப்பட்ட மக்கள்மீது தொடர்ந்தும் திணிக்க அரசு முயற்சிக்கிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்றுவரை இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கான மனிதாபிமான தேவைகளை பொது அமைப்புகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் விடுதலைப்புலிகள் அமைப்புமே நிறைவேற்றிக்கொணடிருக்கின்றன என்பதனை உலகம் நன்கு அறியும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் அனைவரையும் தயவுசெய்து தம்முடன் நேரிலோ, 222 3942 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்புகொண்டு கல்வி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய வசதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்டுள்ளது. (ற)

# இடைத்தங்கல் முகாம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பிரிவில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளான மணற்காடு, குடத்தனை கரையோர மக்களுக்கு குடத்தனையில் இடைத்தங்கல் முகாம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியிலிருநது இடம்பெயர்த்தவர்களை தற்போது புலோலி மெ.மி.பாடசாலையில் இருந்து வருகின்றனர்.

இவர்களின் வாழ்வியல் மேம்பாடு கருதி சொந்த இடத்துக்கு அண்மித்ததாக குடத்தனையில் இடைத்தங்கல் முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (க-35)

# பொருட்களைத் திருடிய நபருக்கு 24 மாத கால சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

கடைகளை உடைத்து பொருட்களைத திருடிய நபர் ஒருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் 24 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்துள்ளது.

உரும்பிராய்ச் சந்தியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தை உடைத்து 2 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான மின்விசிறியைத் திருடியமை, சலவைத் தொழிலகத்தை உடைத்து 4 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உடுப்புவகைகளைத் திருடியமை மற்றும் புகைப்பட நிலையமொன்றை உடைத்து 6 ஆயிரம் ரூபா பெறுமதியான கமரா, பிளாசர் என்பனவற்றைத் திருடியமை போன்ற குற்றச் செயல்களின் பேரில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பிரஸ்தாப நபரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து கடந்த புதன்கிழமை நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். பிரஸ்தாப நபர் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து, அவருக்கு ஒவ்வொரு வழக்குகளுக்கும் தலா 8 மாதகால சிறைத்தண்டனைப்படி 24 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சிறைத் தண்டனையை ஒன்றின் பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டுமெனவும் பிரஸ்தாபநபரின் கைவிரல் அடையாளத்தை நிதிமன்ற பொலிஸ் சார்ஜன் பெற்று கைவிரல் அடையாளப் பதிவாளருக்கு அனுப்பிவைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-19)

# சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களே பாதிக்கப்பட்டன

## கடற்றொழில் அமைச்சு தகவல்

(கொழும்பு)

கரையோரப் பிரதேசங்களில் சட்டவிரோதமாகக் கட்டடங்களைக் கட்டுதல், மணலையும் பவளக் கற்பாறைகளையும் தோண்டுதல் போன்றவற்றிற்கெதிராக கடும் நடவடிக்கை எடுப்பதென கடற்றொழில் நீரியற்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை பூகம்பப் பேரலையால் அதிகம் பாதிக்கப்பட்டவை சட்டவிரோதக் கட்டடங்களே என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

பவளக் கற்பாறைகளை சட்டவிரோதமாக தோண்டுவதாலேயே கரையோரங்களில் அதிகளவும் மண்ணரிப்பு ஏற்படக் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஹகல்வ, சீரிஹம, அக்குரல்ல ஆகிய இடங்களில் மண்ணரிப்பு அதிகமாக இடம்பெறுவது குறிப்பிடத்துக்கது. (க-7)

# இந்திய சுவாமிகள் வடமராட்சிக்கு விஜயம்

(துன்னாலை)

இந்தியா பொங்களூரிலுள்ள அன்பு வழி அமைப்பைச் சேர்ந்த சுவாமி சத்தியஜாதா தலைமையிலான 6பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் வடமராட்சிக்கு வந்தனர்.

இவர்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன வடமராட்சியிலுள்ள அனர்த்த பிடத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியையும் சந்தித்து கலந்துரையாடினர். (ச-101)

# முகாம் பராமரிப்பில் இராணுவம் ஈடுபடுத்தப்படுகின்றமை பாரிய மக்கள் போராட்டத்திற்கே வழிவகுக்கும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்து தமிழ்மக்கள் தங்கியுள்ள புனர்வாழ்வு நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படைகளிடம் ஒப்படைத்திருப்பது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆட்சேபம் வெளியிட்டுள்ளார்.

இதுவிடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பில்,

கடந்த பல்லாண்டுகளாக தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை சீரழித்துவிடும் நோக்கில் தமிழ் மக்களுக்கெதிராக அரசாங்கம் நடாத்திய யுத்தத்தில் ஏறத்தாழ 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டும், பல நூறு யுவதிகள் இராணுவத்தாலும் முப்படையாலும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறான இராணுவத்தினர் தமிழ்மக்களின் புனர்வாழ்வு நிலையங்களை பராமரிப்பதும், பாதிக்கப்பட்டோருக்கு உணவு, மற்றும் பொருட்களை பங்கிடுதல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது அரசின் மிக மோசடித்தனமான செயற்பாட்டையே காட்டுகின்றது.

திருகோணமலையில் இராணுவத்தினர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்றதால் அங்குள்ள மக்கள் நலன்புரி நிலையங்களை விட்டே வெளியேறியுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிய பொருட்களை அம்பாறையில் அதிரடிப்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். எனவே, இவ்வாறான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் புனருத்தாரண நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடமுடியாதென்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி கடந்த சில நாட்களாக அமெரிக்கா, பிரிட்டன், சுவிற்சர்லாந்து, நோர்வே, கனடா, ஜப்பான், நெதர்லாந்து மற்றும் இந்தியத் தூதுவர்களைச் சந்தித்து அரசாங்கத்தின் இத்தகைய மோசமான செயற்பாடுகளை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளோம்.

அதுமாத்திரமல்லாமல் மிக அதிகமாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமும் பாதிக்கப்பட்ட மக்களுமாக தமிழ் பேசும் மக்களும் அவர்களது வாழ்விடங்களும் இருப்பதால், சர்வதேச உதவி அவர்களுக்குத் தேவையான அளவு சென்றடையவேண்டுமென்பதையும் கோரியுள்ளோம்.

சர்வதேச உதவிகள் முழுமையாக அரசாங்கத்தினூடு செல்லும் பொழுது அது மிகப்பெரும் ஊழலை உருவாக்கும் என்பதுடன் அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே இப்பணம் செலவு செய்யப்படும் என்பதையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

எனவே சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், உள்ளூர் தொண்டு நிறுவனங்களூடாக இப்பணம் செலவு செய்யப்படவேண்டுமென்பதையும் சர்வதேச சமூகம் கொடுக்கும் உதவிகள் தொடர்பான விபரங்கள் கணக்கிருக்க வேண்டும் என்பதுடன் அது அவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்ற வெளிப்படைத்தன்மையும் இருக்க வேண்டுமென்பதையும் கோரியுள்ளோம்.

அரசாங்கம் உதட்டளவில் ஒற்றுமையைப் பற்றி பேசினாலும் இவ்வளவு இடர்பாடுகளுக்குப் பின்னரும் கூட அவர்களின் தமிழர் விரோத நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் காட்டுகின்றன. இந்த அனர்த்த நிலைமையில் நாம் எவ்வளவு தூரம் தமது வாக்கு வங்கியைப் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஸ்தரிக்கலாம் என்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆனால் மிக அதிகமான உலக நாடுகள் எமது கோரிக்கையை புரிந்துள்ளதுடன், தமிழ் மக்களுக்கு அவ்வுதவிகள் கிடைப்பதற்கான முழு நடவடிக்கைகளும் தம்மால் எடுக்கப்படும் என்றும் உறுதி கூறியுள்ளனர்.

அதுமாத்திரமல்லாமல், சிவில நடவடிக்கைகளிலும் முகாம் பராமரிப்பு போன்ற விடயங்களிலும் இராணுவம் ஈடுபடுத்தப்படுமானால் அது மிகப் பாரிய மக்கள் போராட்டங்கள் உருவாகவே வழிவகுக்கும் என்பதையும் இவ்வரசிற்கு கூறிக கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-07)

# பவுசர் மூலம் குடிநீர் விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோருக்கு தேவையான குடிதண்ணீர் பளையிலிருந்து பவுசர்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

தொண்டர் நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பவுசர்கள் மூலம் தினமும் காலை முதல் மாலைவரை குடிதணணீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

அதேவேளை இப்பகுதியில் உள்ள குடியிருப்பு கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டு இறைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இறைக்கப்பட்ட கிணறுகள் அடையாளமிடப்பட்டு அக்கிணறுகள் குளிக்கமட்டும் பாவிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (க-35)

# சேதமுற்ற பாடசாலைகளை ஆரம்பிக்க மாற்று நடவடிக்கை

(கொழும்பு)

'சுனாமி'அனர்த்தம் காரணமாக பாடசாலைகள் ஆரம்பிக்கும் தினத்தை நாளைவரை பிற்போட்டுள்ள கல்வியமைச்சு உடனடியாக திறக்க முடியாதுள்ள 400 பாடசாலைகளையும் நாளை ஆரம்பிப்பதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பினை மாகாண கல்வியமைச்சுக்களிடம் ஒப்படைத்துள்ளது.

முகாம்களையும், பாதிக்கப்பட்ட பாடசாலைகளையும் அதிகளவு கொண்டுள்ள வடக்கு -கிழக்கு மாகாணங்களில் கல்வியமைச்சு பாடசாலைகளைத் திறக்க எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக 24கல்வி வலயங்களுக்கும் சுற்றுநிருபங்களை அனுப்பியுள்ளது.

அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகளில் பாடசாலையினை ஆரம்பித்தால், பாடசாலைகளை நடத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டால் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு அகதிகளைப் பொருத்தமான வேறு இடத்திற்கு அகற்றிய பின் பாடசாலைகளை ஆரம்பித்தல், அல்லது தற்காலிக கொட்டகைகளை அமைத்து நடாத்துதல, அல்லது இருவேளை பாடசாலைகளாக நடத்துதல், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு நிரந்தர பாடசாலைகளின் ஒருபகுதி யில் தனியாக வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், ஆகிய விடயங்கள் இந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் சிரமங்கள் இருப்பின் அதுபற்றி தொலைமடல் மூலம் அறியத்தருமாறு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் இராசையா சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, திறக்க முடியாதுள்ள 400பாடசாலைகளில் 244பாடசாலைகள் அகதி முகாங்களாகியுள்ளன.

முற்றாக அழிந்துபோயுள்ள பாடசாலைகள்- 41, பாரியளவில் சேதமடைந்துள்ள பாடசாலைகள்-71, பகுதியளவில் பாதிக்கப்பட்ட பாடசாலைகள்- 44 என அடையாளம் காணப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 30பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டும் 44 பாடசாலைகள் பாரிய சேதமடைந்தும் உள்ளன.

முற்றாக அழிந்துபோன பாடசாலைகள் முல்லைத்தீவில்-9, யாழ்ப்பாணத்தில்-8, திருகோணமலையில் -7, அம்பாறையில்-6 என்றும் இதைவிட பாரியளவில் சேதமடைந்துள்ள பாடசாலைகளில் திருகோணமலையில்-14, அம்பாறையில்-14, மட்டக்களப்பில் -9, யாழ்ப்பாணத்தில் -5, முல்லைத்தீவில்-2 எனவும் புள்ளி விபரத் தகவல்கள தெரிவித்துள்ளன. (க-9)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

32

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

## 24.குயிற்றூதில் காணப்படும் குறிப்புகள்

தலைநகர் ஆராய்ச்சியால் பற்பல கூற்றுக்களால் தடுமாறி நின்றார்க்கு இக்குயிற்றூது ஒரு நிச்சயத்துக்கு வர உதவுவதாயிற்று. அதாவது,

கோட்டைச் சிங்கள அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகுவின் ஏவலின் வண்ணம் செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் இராச்சியத்துக்குப் படை எடுப்பான். வந்து அப்பொழுது கி.பி.1450ஆம் ஆண்டில் நல்லூரில் தலைநகர் கொண்டரசியற்றி நின்ற கனகசூரிய சிங்கையாரிய மன்னனுடன் பொருதி அவற்றின் தலைநகரை வென்று அவனை ஒட்டெடுக்கப்படச் செய்த செய்தி சொல்லப்பட்டது.

படை எடுக்கப்பட்ட அவ்வாரிய அரசன் ஆறாம் பராக்கிரமவாகு காலத்தவன் என்பதால் அவன் கனகசூரியன் என வண.சு.ஞா (யா.வை.வி.பக்.105) உரைக்கின்றார். எனவே, அவன் படை எடுப்புக்காலத்திலே நல்லூர்த் தலைநகரிலே கனகசூரியன் ஆட்சிபுரிந்து கொண்டிருக்கிறான் என்றறிக. இ:திங்ஙனமாக "நல்லூர் பிறபடக கோட்டை இராச்சியம் வகித்த செண்பகப்பெருமாள் 15ஆம் நூற்றாண்டில் கட்டுவித்த தாம் இம்மதம் எனக்கும் சம்மதம்'' என சு.ஞா அவர்கள் பிறிதோரிடத்தில் மொழியக் காரணம் என்னை? அக்குயிற்றூதிற் கொண்டிருக்கும் உண்மை உள்ளூரச்சரியாக இங்ஙனம் மொழிவார்க்குப் புலப்படவில்லை என்பதுதான் எம் கருத்து. என்னையெனின் செண்பகப்பெருமாள் அந்நகர்க்குள் நுழைந்தமை முந்தியதா? அவன் அந் நகரை வென்று அந்நகர் அதிகாரத்தைத்தான் அடைந்து திரும்பக் கட்டியமை முந்தியதா? அந்நகர் அரசனை வென்ற பின்னன்றோ அங்ஙனம் கட்டுதல் கைகூடும். (இவன் கட்டினானோ கட்டவில்லையோ என்பது பிறிதொரு ஆராய்ச்சி) எனவே செண்பகப்பெருமாள் படை எடுத்துவந்த அப்பொழுதே ஒரு தலைநகரம் இருந்திருக்கிறதேடி அதிலே தான் கனகசூரியன் அரசாற்றிக் கொண்டிருக்கிறான் அத்தலைநகரம் தான் யாது?

செண்பகப்பெருமாளின் படை எடுப்பின் குறிப்புக்களில் "அது கரைபுரண்டு சேனா வெள்ளம் இராசதானியின் மேல் எழுந்து வருவதையறிந்த செகராசசேகரன் தடுத்தான். நீலத்துரங்கத்திவர்ந்து செண்பகப்பெருமாள் பட்டணத்தை முற்றுகையிடத் தீர்மானித்தான் என்பது வலன்றைன் குறிப்புக்களாலும் தெரிகிறது. செண்பகப் பெருமாள் யாப்பா (நெ) பட்டினத்தில் நுழைந்து அதன் வீதிகளை இரத்த வெள்ளம் ஓடும் ஆறுகளாக்கினான்) அரசனும் குடும்பமும் ஒழித்தோடிவிட பல பிரதானிகளைச் சிறை செய்து வெற்றி வாகை சூடி திகழ்ந்தான். செண்பகப்பெருமாள் பட்டினத்தைக் கைப்பற்றினான். யாப்பாப்பட்டினத்தை தன்னரணாக்கி செண்பகப் பெருமாள் கைக்கொண்டு ஆண்டநகர் விசாலித்த தெருக்களும் உப்பரிகை பொருந்திய வீடுகளும் மாளிகைகளும் உளதாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பனவாகச் சொல்லப்படும் இக்குறிப்புக்களால் இவன் படை எடுப்பிற்கு முந்தியே ஒரு தலைநகரம் அங்கே இருந்தமை ஐயமின்றித் துணியப்படும் அன்றியும் செண்பகப்பெருமாள் யாப்பாப் பட்டினத்துள் நுழைந்து அதன் வீதிகளை இரத்த வெள்ளம் ஓடும் ஆறுகளாக்கினான். அரசனும் குடும்பமுமொழித்தோடி விடப் பல பிரதானிகளைச் சிறை செய்து வெற்றிவாகை சூடித் திகழ்ந்தான். (யா.வை. வி.பக். 105) என்பவற்றாலும் அக்குயிற்றூதுக்காரரே ஆரியச்சக்கரவர்த்தியைத் துரத்திவிட்டு யாப்பாப்பட்டினத்தை (நுல்லூரை) தன்னரணாக்கி வாழ்கின்ற நாநாசுகீர்த்தி பொருந்திய சப்புமல் (செண்பகப்பூ) ராசேந்திரனுக்கு என்று அக்குயிற்றூதில் சொல்லி இருக்கல்லவா இது தொண்டும் அறிக. அந்நகர்தான் யாது கனகசூரியன் அங்கிருக்கக் காரணம் என்னை? அக்கனக சூரியன் தான் யாவன். அவனேதான் இருந்த தலைநகரைக் கட்டினான்? அன்றேல் அவன் மூதாதையர் பரம்பரையாய் ஆட்சி செய்து வந்த தலைநகரில் இருந்தாட்சி செய்தானா? என்னும் விசாரணைகள் ஈண்டெழுப்பப்படுகின்றன. இவன் செண்பகப் பெருமாளுக்கு முற்பட இருத்தலால் அச்சிங்கையாரிய அரசின் ஆவலீயை,வைபவமாலை சொல்லிய வண்ணமே அவர்களும் ஏற்றுக்கொண்டதாலும் அவ்விருசாரார் கொள்கைப் படியும் இவன் அச்சிங்கையாரிய மன்னனுடைய கடைசி அரசன். அவன் புதிதாக ஒரு தலைநகரைக் கட்டிய செய்தி யாராலும் சொல்லப்படவில்லை. அவன் முன்னோனாய ஆதிச்சிங்கை ஆரியன் கட்டிய தலைநகரிலேதான் பரம்பரை பரம்பரையாய் ஆட்சி செய்து வந்த பதினோராவது சிங்கையாரியன் என்பதை அவ்விருசாராரும் ஒப்புகின்றனர் ஆயின் வைபவமாலையோ அவ்வாதித் தலைநகரை நல்லூரோடு படுத்திச் சொல்ல அதாவது நல்லூரில் கட்டப்பட்டதென்று சொல்ல அப்பிறர் அத்தலைநகர் கட்டிய வரலாறுரையராய் அ்து வல்லிபுரத்தின் கண்ணது என்கின்றனர். விஷயம் சரியாய் புரிந்துவிட்டது. புரிவிக்கவும் முடிந்துவிட்டது தலைநகரான நிச்சயமும் நிகழத்தான் போகின்றது. முன்னர்ச்சாசன ஆராய்ச்சியாலும் வல்லிபுர ஆராய்ச்சியாலும் வல்லிபுரத்தில் சிங்கையாரியர் வாழ்ந்திருக்கவில்லை எனக் கண்டோம் ஈங்கு அக் குயிற்றூது நல்லூருக்கு அதாவது நல்லூரிலுள்ள செண்பகப் பெருமாளுக்கு அனுப்பியிட்டதையுங் கண்டோம்.

எனவே அக்குயிற்றூதனுப்பப்பட்ட இடம் இக்கனகன் இருக்கப்பெற்றதான ஆதிச் சிங்கை நகர்தான். இன்னும் என்னையெனின் அக்குயிற்றூதாசிரியர் அக்குயிலைத் தெய்வேந்திர நகரத்திலிருந்து நல்லூருக்கு விடுப்பவராய் அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட இடங்களைத் தாண்டிப்போகும் மார்க்கத்தை விளங்கப்படுத்தும் வகையில் வழி உள்ள சாவகச்சேரியையும்...... தாண்டி அப்பால் நல்லூருக்குச் செல்லும்படி சொல்லுகிறார். அத்தலைநகர். முன்தொடடே அன்றியும் அப்பொழுதும் வல்லிபுரத்தில் இருந்திருக்குமேயானால் நல்லூரில் இருந்து வடகிழக்காய் இருபத்தைந்து மைல் வரை தொலைவிலுள்ள வல்லிபுரத்துக்கே அக்குயிலைத் தூதாகப் போக்கியிருப்பார் என்பதும் அவ்வகையில் நல்லூருக்கும் வல்லிபுரத்துக்கும் இடைப்பட்ட இடங்களைச் சுட்டிப் பேசி இருப்பார் என்பதும் முக்கியமாக நல்லூர் பருத்தித்துறை வல்லிபுரம் என்பனவாகுதல் அவரால் அப்போது பேசப்பட்டு அக்குயிலுக்கு மார்க்கம் உரைக்கும் வகையில் சொல்லப்பட்டிருக்குமென்பதும் அவர் நல்லூர்க்கு ஆற்றுப்படுத்தி இருக்கமாட்டார் என்பதும் நிச்சயத்தின் மேலும் நிச்சயமாயிற்று என்க.

(தொடரும்)

# சிவத்தமிழ்ச் செல்வியின் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80ஆவது அகவை நிறைவு அறக்கொடை விழா நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை தேவஸ்தான நிர்வாகசபை உப தலைவர் மு.சபாநாதனும் ஆசியுரையை தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் முன்னுரையை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் வழங்கினர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மொறிசியஸ் நாட்டு இலங்கைக்கான தூதுவர் தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரன் கலந்துகொண்டார்.

''சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்'' எனும் நூலை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் 'வாழக எம் அன்னை' எனும் நூலை ஒய்வுபெற்ற தேசிய கல்வி நிறுவக உப பணிப்பாளர் நாயகம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரமும் வெளியிட்டு வைத்து வெளியீட்டுரைகளை வழங்கினர். (ற-19)

# சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த விஷேட வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக அரசாங்கமும் யுனிசெப் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியனவும் இணைந்து வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றன.

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த சிறுவர்களை வன்முறைகளில் இருந்தும் துஷ்பிரயோகங்களில் இருந்தும் பாதுகாப்பதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ் அரசாங்கத்தின் சார்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, யுனிசெப் நிறுவனத்துடனும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடனும் இணைந்து அநாதரவான சிறுவர்களைப் பதிவு செய்ய இருக்கின்றன.

இதற்கான இந்த அமைப்புக்கள் நலன்புரி முகாம்களுக்கு நேரடியாகச் சென்று இப் பதிவுகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

அதேநேரம் முகாம்களில் இருந்து ஏனைய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள ஆதரவற்ற சிறுவர்களையும் குறிப்பிட்ட நிறுவனங்களில் பதிவு செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (ற-4)

# அவசர மருத்துவப் பணிகளை முன்னெடுக்க ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி பேரலையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தென் மாகாணங்களில் அவசர மருத்துவ நிவாரணப் பணிகளை முன்னெடுக்க ஜப்பான் நிதியுதவி வழங்கியுள்ளது.

இந்த இரண்டு மாகாணங்களிலும் நடமாடும் மருத்துவ சேவையை வீரிவுபடுத்தல், பாடசாலை சுகாதாரக் கல்வித்திட்டம் ஆகியவற்றிற்காக 19 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு ஜப்பான் வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட மாகாணங்களில் அரச சார்பற்ற ஜப்பானிய நிறுவனம் சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

சுனாமிப் பேரலை தாக்கிய மறுதினத்தன்று கிளிநொச்சி, திருகோணமலை மாவட்டங்களில் உலர் உணவுகளையும் மருந்து வகைகளையும் அத்தியாவசியப் பொருட்களையும் இந்த நிறுவனம வழங்கியிருந்தது.

தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ற-4)

# டென்மார்க் தூதுவர் திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

இலங்கை, இந்திய நாடுகளுக்கான டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரோன் பேர்க் கடந்த வியாழனன்று திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார். இவருடன் தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட்ட 14பேர் அடங்கிய குழுவினரும் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனைச் சந்தித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு நிவாரண உதவிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

இதனையடுத்து இக்குழுவினர் 10 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கையளித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்பகுதிகளுக்கு அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். (ற-4)

# காணாமல் போனோர் தொகை 4ஆயிரத்து 356 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையைத் தாக்கிய சுனாமி அனர்த்தத்தின் காரணமாக 4ஆயிரத்து 356 பேர் காணாமல் போயிருப்பதாக சமூக நலன்புரி அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 300 பேரும்,மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 81 பேரும், யாழ்ப்பாணத்தில் 540 பேரும் இவ் அனர்த்தத்தில் காணாமல் போயுள்ளனர்.

இவ் அறிக்கையில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 236 பேர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நலன்புரி நிலையங்களில் 3 இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரும் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் 2இலட்சத்து 47 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் தங்கியுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

## இன்று ஒரு தகவல்

# கனவுகள்

1865ஆம் ஆண்டில் ஒருநாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிர காம்லிங்கன் தன் மனைவியிடம் சென்று "சமீபத்தில் நான் ஒரு கனவு கண்டேன்" என்கிறார். "என்ன கனவு?" என்று கேட்டார் மனைவி. இவர் விவரிக்கிறார் "ஒருநாள் வெள்ளை மாளிகையில் அழுகைச் சத்தம் கேட்டது அதைக் கேட்டு நான் திடுக்கிட்டு விழித்தேன். மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக அழுது கொண்டு நின்றார்கள்.

எனக்கு எதுவும் புரியவில்லை. மாடியில் இருந்து கீழே இறங்கிவந்தேன். எல்லா அறையிலும் வெளிச்சம். அழுகைச் சத்தம் தொடர்ந்து கேட்டது அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்று ஒவ்வொரு அறையாகத் தேடிக் கொண்டு வருகிறேன். கிழக்குப் பக்கத்து அறைக்குள்ளே நுழைகிறேன். சவ ஊர்வலத்துக்குத்தயாராக ஒரு உடலைக் கிடத்தியிருந்தார்கள் முகம் மூடியிருந்தது. அந்த சவத்தைச் சுற்றியிருந்தவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள்" என்றார். "யாருடைய சவம் அது?"என்று கேட்டார் அவரது மனைவி. "ஜனாதிபதியுடையது அவரை யாரோ கொலை செய்துவிட்டார்கள்" என்றார் ஆபிரகாம்லிங்கன். இது நடந்து கொஞ்சநாளில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

கனவு என்பது என்ன? கனவில் நடப்பதற்கும், கண் முன்னே நடப்பதற்கும் சம்பந்தம் உண்டா? கனவுகள் விடைகாண முடி யாத புதிர் என்று சிலர் கூறுகின்றனர். 'கனவு மனச்சாட்சியின் குரல்' என்கிறார் சோக்ரடீஸ். "உடல் அசதியினால் ஏற்படும் ஒரு வீண்காட்சியே கனவு" என்கிறார் வால்டேர். "உணர்வற்ற ஒரு நிலைக்கு எம்மை அழைத்துச் செல்லும் ராஜபாட்டை" என்கிறார் ஃபுரொயிட்.

கனவுகள் மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராமாயணத்தில் திரிசடை கண்ட கனவு, சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவி கண்ட கனவு போன்றனவெல்லாம் பின்னாளில் நடக்கப் போவதை முன் பாகவே கூறிவிட்டன. எகிப்தின் வரலாற்றில் நான்காவது துட்மோஸ் என்ற ஒருவர் வேட்டையாடி விட்டு வந்த களைப்பில்'ஸ்பிங்ஸ்' தேவதை யின் சிலைக்குப் பக்கத்தில் படுத்து உறங்கிவிட்டார். அப்போது ஒரு கனவு கண்டார் அவர் பட்டத்துக்கு வருவது போல். அதுபோலவே அவர் பட்டத்திற்கும் வந்து விட்டார்.

கனவுகள் சிலசமயம் ஒழுங்காகக் கோர்வையாக வரும். சிலசமயம் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாமல் வரும். விடிந்த பின் யோசித்துப் பார்த்தால் என்ன கனவு என்றே நினைவுவராது.

பொதுவாக மூன்று நிலைகளில் கனவு வரலாம. ஒன்று கடுமையான அசதி இல்லாவிட்டால் உடல் நிலை பாதிப்பினால் வரலாம், இன்னுமொன்று மனதில் உள்ள ஆசைகளை வெளிப்படுத்தக் கூடிய விதத்திலும் வரலாமாம். மூன்றாவது ஆத்மாவில் இருந்து தெய்வீக சக்தியால் வெளிப்படுகிறது என்றும் கூறுவார்கள். இதில் முதலாவது நிலைக்கு விளக்கம் கொடுக்க முடியும். அடுத்த இரண்டு நிலைக்கும் விளக்கம் கொடுப்பது கஷ்டம்.

இந்த உலகம் முடிவில்லாதது சிக்கல் மிகுந்தது. இதைச் சமாளிக்க செயல்களை ஒழுங்கு முறைப்படுத்தி இயங்கி வரும் மனித இனத்திற்கு இரண்டு வழி உள்ளது. முதல்வழி நமது மூளையின் இடது பகுதியுடன் தொடர்புபட்டது.நாம் விழித்திருக்கும் போது செய்யும் செயல்கள் எல்லாம் இதன் கட்டளைப் படி நடக்கிறதாம். இரண்டாவது வழி நமது மூளையின் வலது பகுதி யுடன் தொடர்புபட்டது. உணமைச் செயலை விட உணர்விற்கு மதிப்புக் கொடுக்கும் இந்தப் பகுதிதான் கனவு காணும் மன நிலைக்கு வழிமுறை என்று தோன்றுகிறது.

பகலில் ஏற்படும் பலவித உணர்ச்சிகள் இங்கு பதிவாகிவிடு மாம். இரவு தூக்கத்தில் கனவு என்ற வடிகால் மூலமாக அவற்றிற்கு தீர்வு காணப்படுகிறது என்று விளக்கம் கொடுக் கிறார்கள். பொதுவாக கனவு காண்பது நல்லது என்று தான் பலரும் சொல்கிறார்கள். ஆழ்ந்த உறக்கம் போதுமான ஓய்வை நமது மூளைக்குக் கொடுக்கிறது. தீர்க்க முடியாத சிக்கல்களுக்கு கனவு மூலமாகத்தீர்வு ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். எத்தனையோ பேர் தினமும் எவ்வளவோ கனவு கண்டு கொண்டுதானிருக்கிறார்கள்.

அவ்வளவும் உடன் நடந்து விடுவதில்லை. அபூர்வமாக சில விடயங்கள் நடக்கின்றன. நீங்கள் ஏதாவது கெட்டவிதமாக கனவு கண்டால் அதை நினைத்துப் பயந்து கொண்டிருக்காதீர்கள். இதற்காகத்தான் பெரியவர்கள் கூறினார்கள். கெட்ட கனவுக்கு நல்ல பலன் உண்டென்றும் எதிர்மறையான பலன் உண்டென்றும் சொல்வார்கள். பத்து ரூபா தொலைத்ததாக கனவு கண்டால் பத்து ரூபா வருமானம் வரும் என்றெல்லாம் ஒரு மனோ தைரியத்திற்காகச் சொல்லி வைப்பதுண்டு இதிலும் ஒரு கஷ்டம்.

ஒருவர் ஓடிவந்தார் "சார் இன்று நான் உங்கள் வீட்டில் தங்குகிறேன்" என்று கெஞ்சினார் பரிதாபமாக. "ஏன்?" என்று கேட்டேன். "நேற்று ஒரு கனவு கண்டேன் சார்" என்றார். "என்ன கனவு?" என்று கேட்டேன். "என் மனைவியை நான் அடிப்பது போல் கனவு"என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# கடலனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15 நாட்களில் முன்மாதிரி குடியிருப்பு

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கடற்புலி நடுக்க அனர்த்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை மாதிரிக் கிராமங்கள் அமைத்துக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தலைமையில் கடந்த வியாழனன்று மாலை 3.30 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள கடற்புலிகளின் தற்காலிக மீட்புப் பணி முகாமில் நடைபெற்றது.

ஆழிப்பேரலையினால் இடம்பெயர்ந்து படசாலைகளிலும், பொது மண்டபங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மீண்டும் ஒருமுறை அலையின் தாக்கத்திற்குள்ளாகாதவாறு ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படாத முல்லை நகரை அண்டிய பகுதிகளில் மக்களின் விருப்பத்திற்கமைவாக இடங்கள் தெரிவு செய்யப்பட்டு முகாமை அமைக்கும் பணியில் துரித கதியில் ஈடுபடுவதற்கான ஒழுங்குகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இக்குடியிருப்புக்கள் அனைத்தும் சுகாதார முறையினைப் பேணக்கூடியதாகவும், மலசலகூடம், பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி ஆகிய வசதிகளைக் கொண்டதாக அமைவதோடு மின் ஒளிர்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளியூட்டக்கூடிய வகையிலும் அமைக் கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்குடியிருப்புக்கள் அனைத்தும் நேற்று முதல் பதினைந்து நாட்களுக்குள் அமைக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்படுவர் எனவும், இத் தற்காலிக வீடுகளில் ஏறத்தாழ ஆறுமாதங்கள் வரை மக்கள் குடியிருக்க நேரிடலாம் எனவும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ திட்டமிடல் செயலக பிரதிப்பணிப்பாளர் மாறன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா மற்றும் உதவி அரச அதிபர்கள், மதகுருக்கள், முல்லை மின்சாரச்பை அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு தமது ஆலோசனைகளையும் வழங்கினர். (ச-4)

# கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் 12 ஆம் திகதி யாழ்.வரவுள்ளார்

(ரொறன்ரோ)

கனடா ரொறன்ரோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். 11ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கும் 12ஆம் திகதி வடக்கிற்கும் குறிப்பாக யாழ்ப்பாணததிற்கும் இவர் விஜயம் செய்யவுள்ளார்.

கிரேக்க நாட்டில் இருந்து சிறு வயதில் அகதியாகக் கனடாவுக்குள் நுழைந்து தற்போது லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவுள்ள ஜிம் கரியானிஸ் கனேடிய தமிழ் மக்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருபவர். ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் பல்லின பல் கலாசார மக்களுடன் ஒன்றிணைந்து நடப்பதுடன் பல வித உதவிகளையும் வழங்கி வரும் இவர், வடக்கு-கிழக்கில் நிவாரணப்பணிகள் நேர்மையாக முன்னெடுக்கப்பட இலங்கை அரசு உதவுகிறதா என்பதை ஆராயவே தனது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடா ரொறன்ரோ மாநிலத்தில் வாழும் தமிழர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. இதற்கிடையில் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் அடங்கிய பிறிதொரு குழு விரைவில் இலங்கை வந்து நிலைமைகளை நேரில் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது. (ந-4)

## இராசி பலன்

**09.01.2005** (மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 08.52 மணிவரை
மூலம் முன்னிரவு 08.38 மணிவரை
இராகுகாலம் 05.03 - 06.33 மணிவரை
சுபநேரம் 3.33 - 11.03 மணிவரை
அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | ரோகநிலை, பெரியோர் மனஸ்தாபம், காரிய தாம்தம், புதியதொழில்சிந்தை. |
| இடபம் | ஆரோக்கிய குறைவு, மனஸ்தாபம், முயற்சி தாமதம், வாகனப்பயம். |
| மிதுனம் | செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, பகைவர் நேசம். |
| கடகம் | உறவினர் சந்திப்பு, உற்சாகம், மன மகிழ்ச்சி, காரிய அனுகூலம். |
| சிங்கம் | தாழ்ந்த சுபாவம், வியாபாரசிந்தை, வியாதி, முயற்சி தாமதம். |
| கன்னி | மனப்பயம், வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| துலாம் | சகோதரர் உதவி, பிரயாணம், நன்மை, தனவரவு, தேகநலன். |
| விருச்சிகம் | இடமாற்றம், விவாதம், மாதர் நட்பு, காரிய தாமதம். |
| தனுசு | சயனசுகம், எடுத்தகாரியம் கைகூடும், தொழில்சிந்தை, பெரியோர்உதவி. |
| மகரம் | அமைதிக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு, சுபசெலவு, காரியஅலைச்சல். |
| கும்பம் | பெரியோரால் மதிக்கப்படுவர், தொழில் நன்மை, கீர்த்தி, பொருள் சேர்க்கை. |
| மீனம் | நிலைமாற்றம், நல்ல சம்பவம், அதிக பிரயாசை, உற்சாகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# புலிகளிடம் நேரடியாக நிவாரணம் கையளிப்பு

## இத்தாலியின் முடிவுக்கு அரசு எதிர்ப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் நேரடியாக நிவாரண உதவிகளை வழங்குவது என்ற இத்தாலிய அரசின் நடவடிக்கைக்கு அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது எதிர்ப்பை இத்தாலி நாட்டு தூதுவர் சல்வற்றோர் சோற்றாவிடம் அரச அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார்.

இலங்கையில் ஒரு அரச நிர்வாகமே இருக்கிறது எந்தவொரு உதவி வழங்குவதாயினும் தங்கள் அரச நிர்வாகத்தின் ஊடாகவே அவ் உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இத்தாலி தூதுவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியத் தூதுவர் வன்னிக்கு சென்று தமது நிவாரணப் பொருட்களை கடந்த செவ்வாயக்கிழமை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# 104 பேர் கைது

(கொழும்பு)

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைக் கொள்ளையடித்த மற்றும் மோசடி செய்த 104 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பாந்தோட்டை, பென்தோட்டை, தங்காலை, மாத்தறை ,காலி,எல்பிட்டிய,களுத்துறை, பாணந்துறை,முகத்துவாரம்,மொரட்டுவ, கல்முனை, பொத்துவில் ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு-4)

இல லென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள - குறள்

வலம்புரி

# பார்வையிடுவதோடு மட்டும் பணி நின்றுவிடலாகாது!

வடக்குக் கிழக்கில் சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய பேரழிவுகளை பார்வையிடுவதற்காக அரசு, எதிர்க்கட்சி மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எனப் பலரும் வந்துபோகின்றனர். இவர்களின் வரவினால் மக்களின் எதிர்பார்ப்புக்களும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

சுனாமி அனர்த்தம் வடக்குக் கிழக்கில் ஏற்படுத்திய பேரழிவுகளை நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரில் பார்வையிட வருகைதந்தார். அவரின் வருகை வரவேற்கப்படவேண்டியதொன்று. எனினும் கூடாத கூட்டத்துடன் கூடிவந்ததனால் அவருக்கு வழங்கப்படவேண்டிய வரவேற்பில் சில மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டது. இது துரதிஷ்டவசமானதாகும்.

தமிழர் பண்பாட்டில் எதிரியையும் வரவேற்கும் சிறப்புண்டு. ஆனால் ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகள் இந்த நாட்டின் துரோகிகள். இவர்களின் செயற்பாடு காரணமாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாமல் உள்ளது.

இவ்வாறு இனவாதத்தைத் தூண்டிவிட்டு நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்த முயற்சிக்கும் ஒரு கட்சியுடன் பிரதமர் ராஜபக்ஷ சேர்ந்து வந்தமை அவர் விட்ட பெரும் தவறாகும்.

வடமராட்சிப் பகுதியைப் பார்வையிடுவதற்கு வருகைதந்த பிரதமர் ஜே.வி.பியுடன் சேராமல் வந்திருப்பாராயின் அவருக்கான வரவேற்பு மிகச் சிறப்பாக இருந்திருக்கும். இதனை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கான வரவேற்பிலிருந்து உணர்ந்துகொள்ளமுடியும்.

எனவே, வடமராட்சிப் பகுதிக்கான விஜயத்தின் போது ஏற்பட்ட சம்பவங்களை வைத்துக்கொண்டு தமிழ்மக்கள் தொடர்பாகவோ, அன்றி நிவாரணப் பணி தொடர்பாகவோ எந்த முடிவையும் பிரதமர் எடுக்கக்கூடாதென்பது முக்கியமானதோர் விடயமாகும்.

இதற்கப்பால் சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவைப் பார்வையிடுவதற்காக தென்னிலங்கையிலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் வடக்குக் கிழக்கிற்கு வந்துபோயுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் வந்துபோனதன் முடிபு பார்வையிட்டதாக மட்டும் இருக்குமாயின் அது பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றுவதாகவே இருக்கும்.

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து மீள்வதற்கு வழிதெரியாமல் தத்தளிக்கும் தமிழ்மக்களின் எதிர்கால வாழ்வியல் குறித்து இன, மத, மொழி போன்ற பேதங்களை மறந்து ஆக்கபூர்வமான தீர்மானங்களை சகலரும் எடுக்கவேண்டும்.

இதுவிடயத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களே பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துவதாக அமையும்.

மேலும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை வெளிநாடுகள் வழங்குகின்றபோது அதனை அந்த நாடுகள் இலங்கை அரசிடமே கையளித்து வருகின்றன.

அதேவேளை சுனாமி ஏற்படுத்திய பேரழிவானது இன, மத, மொழி கடந்த சமத்துவமாகும். இந்நிலையில், வெளிநாடுகள் வழங்குகின்ற நிவாரணப் பணிகளை பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் பாதிப்புக்களின் அடிப்படையில் கிடைப்பதையும் இலங்கை அரசு உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

அதேநேரம் இலங்கை அரசால் வழங்கப்படுகின்ற நிவாரணக் கொடுப்பனவுகள் குறித்த உண்மைத் தரவுகளை யாழ். செயலகம் வெளிப்படுத்தவேண்டும்.

நிவாரணப் பணிகளில் எந்தவித தடைகளோ, தடங்கல்களோ ஏற்படாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொருவரிதும் கடமையாகும்.

# சுகாதார சேவைகளை முன்னெடுப்பதில் இலங்கைக்கு முக்கிய கவனம் செலுத்தப்படும்

## உலக சுகாதார ஸ்தாபனப் பணிப்பாளர் உறுதிமொழி

(கொழும்பு)

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் சுகாதார சேவைகளை முன்னெடுக்கும் போது இலங்கைக்கு முக்கிய கவனம் செலுத்தப்படுமென உலக சுகாதார ஸ்தாபனப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர் அரச உயரதிகாரிகளுடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது சுலபமான காரியமாகும.

உலக சுகாதார ஸ்தாபனப் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சர் உட்பட பல அதிகாரிகளுடன் கிழக்கு மற்றும் தென்பகுதிகளுக்கு விஜயம் மேற் கொண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் முழுமையாக அழிவடைந்த மருதமுனை, சாய்ந்தமருது வைத்தியசாலைகளை பார்வையிட்டார்.

இந்த இரண்டு வைத்தியசாலைகளையும் புனரமைப்புச் செய்வதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் நிதி உதவி வழங்க தீர்மானித்துள்ளது.

அதேவேளை காலி, மஹமோதர வைத்தியசாலைகளும முழுமையாக சேதமடைந்துள்ளதையும் சுகாதார அமைச்சர் உலக சுகாதார சேவைகள் ஸ்தாபனத்தின கவனத்துக்கு கொண்டு வந்தார். (ந-8)

# இளைஞனை காணவில்லையென ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்திலிருந்து கிளிநொசசிக்குச செல்வ தாகக் கூறிச்சென்ற இளைஞர் ஒருவர் இதுவரை வீடு வந்து சேரவில்லையென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி கிளிநொச்சிக்கு வேலைக் காகச் சென்றவர் அங்கு வேலைக்கு வரவில்லை யென தகவல் அறிந்ததை அடுத்து, தமது வீட்டுக்கும் இதுவரை திரும்பி வரவில்லையென பிரஸ்தாப இளைஞரின் தந்தை தனது முறைபாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த அழகரத்தினம் கவின் (வயது-25) என்பவரையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

# உயிரிழந்தோர் தொகை 31 ஆயிரத்தை அண்மிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கரையோரப் பகுதிகளைத் தாக்கிய சுனாமிப் பேரலையினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 அயிரத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக சமூக நலன்புரி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுவரை கிடைக்கப் பெற்ற அறிக்கைகளின் பிரகாரம் 30 ஆயிரத்து 718 பேர் உயிரிழந்துள்ளதாக அமைச்சின அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தத்தின் காரணமாக 4 ஆயிரத்து 939 பேர் காணாமல் போயுள்ளதுடன், 14ஆயிரத்து 573 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், 91 ஆயிரத்து 749 வீடுகள் சுனாமிப் பேரலையினால் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.மேலும் 19 ஆயிரத்து 932 வீடுகள் சிறிய அளவில் சேதமடைந்துள்ளன.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் இருந்த 3 இலட்சத்து 75 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து 793 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 61 ஆயிரத்து 996 குடும்பங்களைச் சேர்ந்த 2இலட்சத்து 74 ஆயிரத்து 800 பேர் 292 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 800 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# இலங்கையின் வரைபடத்தில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை

(கொழும்பு)

சுனாமி தாக்கத்தினால் இலங்கை வரைபடத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லையென நில அளவையியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவின் அமைவிடம் சற்று மாறுபட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. ஆனால் இலங்கையின் அமைவிடத்தில் அவ்வாறான நிலை ஏற்படவில்லையென நில அளவையியல் நாயகம் பி.ஜே.பி.மெண்டிஸ் தெரிவித்தார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இது தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை நிறைவையொட்டி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் 'காலம் தந்த கைவிளக்கு' மற்றும் ஜெர்மனி நாட்டு கலாநிதி 'வெற்றிமணி' சு. சிவகுமாரனின் 'சிவத்தமிழ்' ஆகிய நூல்களின வெளியடும் கையளிப்பும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் பேராசிரியர் அ.சணமுகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸும் தலைமை யுரையை பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும் ஆற்றுவார்கள்.

இந்துநாகரிகத் துறைத் தலைவர் நாச்சியார் செல்வ நாயகம் 'காலம் தந்த கைவிளக்கு' எனும் நூலையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபர் செஞ் சொற் செல்வர் ஆறுதிருமுருகன் 'சிவத்தமிழ்' எனும் நூலையும் விழா நாயகிக்கு கையளிக்கவுள்ளார்.

மற்றும் மதிப்பீட்டுரையை இந்து நாகரிகத்துறை முது நிலை விரிவுரையாளர் கலைவாணி இராமநாதனும் முன்னாள்அதிபர் 'கலைச்செல்வி' ஆசிரியர் பிரமஸ்ரீ சி.சரவண பவன் (சிற்பி) ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ந-9)

# பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைக்கும் பணி ஆரம்பம்

(துன்னாலை)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மின் விநியோகம் மற்றும் வீதித்திருத் தம போன்ற வேலைகளை சம்பந்தப்பட்ட சபைகளின் ஊழியர்கள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக தொண்டமனாறு தொடக்கம் பருத்தித் துறை முனை வரையிலான கடற்கரையோரத்தில் காணப்பட்ட மின்கம்பங்கள் அனைத்தும் முறிந்து சாய்ந்து பலத்த சேதமடைந்துள்ளது.

அவற்றை முதலில் அகற்றி புதிய மின்கம்பங்களை நாட்டி மின் இணைப்புக் கம்பிகள் பொருத் தப்பட்டு வருகின்றன.

இதேபோல் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள பிரதான வீதிகளும் கடல் அலையால் தாக்கப்பட்டு குன்றும், குழியுமாகக் காணப்படுவதால் மண்போட்டு சமப்படுத்தி போக்குவரத்துக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இவை தவிர குடியிருப்புகளில் சேதமான வீட்டுக் கூரைத் தகடுகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களை கடற்கரைகளில கொட்டுவதால் அப்பகுதி கழிவுகளால் குவிந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

(க-101)

## நிவாரணப் பணிகளில் ஈடுபடாமை;

# 29 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு கல்கிசைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபடத் தவறிய 23 பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சேவை இடைநிறுத் தப்பட்டுள்ளதாக கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அபயநாயக்க தெரிவித்தார்.

மேலும் 6 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையை விட்டு விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

தெகிவளை, கல்கிசை மற்றும் மொறட்டுவ பகுதிகளில ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்டவர்களுக்கான நிவாரண விநியோகத்தின் போது 100 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையில் ஈடுபடுத் தப்பட்டனர்.

அதேவேளை, கான்ஸ்டபிள்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடாமை தெரிய வந்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

செயல்முறை மதம் பற்றிய சாதாரண கருத்து எங்கே கொண்டு போய்விடுகிறது என்பதைக் கவனியுங்கள். பிறருக்கு நல்லது செய்வது பெரிய காரியம்தான். ஆனால் அதுதான் எல்லாம் என்று சொல்லும் போது, அது வெறும் உலோகாயதமாக மாறுவதான ஆபத்து இருக்கிறது. அது மதம் அல்ல. நாத்திகத்தை விடச் சிறந்ததும் அல்ல. மாறாக அதை விடச் சற்றுக் குறைவானதே.

சுவாமி விவேகானந்தர்

# காலி - திருமலை - அம்பாந்தோட்டை பகுதிகளுக்கு அனான் நேற்று விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் நேற்றுக் காலை இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள காலி மற்றும் அம் பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிற்கு விஜயம் செய்தார்.

அவருடன் உலக வங்கியின் தலைவர் வூல் பென்சனும் கூடச் சென்றிருந்தார். அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குச் சென்றிருந்த அவரை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வரவேற்று சுனாமியால் பாதிக்கப் பட்ட இடங்களுக்கும் அகதிமுகாம்களுக்கும் அழைத் துச் சென்றார்.

அங்கு பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அனான் கலந்துகொண்டார். அங்கு வாழ்வு நிலையை இழந்த மக்களுக்கும் உயிரிழந்த குடும்பங்களுக்கும் வேண்டிய அனைத்து உதவி களைச் செய்ய ஐ.நா. தயாராக உள்ளதாக தெரி வித்துள்ளார்.

இதன்பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள திரு கோணமலைக்கும் விஜயம் மேற்கொண்டார்.

நேற்றுக் காலை உலங்கு வானூர்தி மூலம் கிண்ணியா விளையாட்டு மைதானத்தை அவர் வந்தடைந்தார். அதனைத் தொடர்ந்து கிண்ணி யாவில் இயங்கும் பொது மருத்துவமனையைச் சென்று பார்வையிட்டார்.

பின்னர் ஆலங்கேணி மற்றும் கிண்ணியா பகுதி களில் இயங்கி வருகின்ற அகதிமுகாம்களை சென்று பார்வையிட்டார்.

இவ் விஜயத்தின்போது ஐ.நா. செயலாளர் நாய கத்தோடு பிரதியமைச்சர் அர்ச்சுன ரணதுங்க திரு கோணமலை மாவட்ட அரச அதிபர் ரோட்ரிக்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் ஆகியோ ரும் சென்றிருந்திருந்தனர்.

சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திற்கு அவர் செல்லவில்லை. இப் பய ணங்களை முடித்துக்கொண்டு உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு சென்றடைந்தார். (த-04)

## கலந்துரையாடல்

'சலனசித்திரம் - யாழ்ப்பாணம்' அமைப்பின் மாவட்ட நிர்வாகி களின் அவசர கூட்டம், கரவெட் டியிலமைந்துள்ள அதன் செயல கத்தில் இன்று காலை 10 மணிக்கு அமைப்பின் ஸ்தாபகரும் இலங் கைத் தேசியத் திரைப்படக் கூட் டுத்தாபனப் பணிப்பாளருமான க.தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிய சினிமாக் கலாசாரத் தை நோக்கி இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம் முன் னெடுக்கும் வேலைத் திட்டத்தை யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் செயற்படுத்தும் வழிவகை பற்றி இங்கு ஆராயப்படும். (க)

## முன்பள்ளி விளையாட்டு போட்டி

கோண்டாவில் வடக்கு மத்தி கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும் பாலர் பாடசாலையும் இணைந்து நடத் தும் வருடாந்த முன்பள்ளி விளை யாட்டுப் போட்டி இன்று பி.ப 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சி.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொன்னையா வைரமுத்து கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேசசபை முன்பள்ளி இணைப் பாளர் பி.மாலதி நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் கோண்டாவில் மத்தி கிராம உத்தியோகத்தர் ம. தயா பரன் ஆகியோர் கலந்துகொள் கின்றனர். (த-130)

## அரசின்...

தமிழ் ஆங்கில செய்திகள் வைஸ் அட்மிரல் தயா சந்த கிரியை மேற்கோள் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும் புல னாய்வுப் பிரிவுத் தலைவரும் சுனாமி அனர்த்தத்தில் இறந்த அல்லது காணாமற் போனோர் பட்டியலில் அடங்கியிருக் கலாம் என செய்தி ஒலிபரப்பப் பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் செய்திகளின் உண் மைத் தன்மையை சரியான தரப்பு களில் இருந்து அறிந்து கொள் ளாது, சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அரசியல் லாபம் தேட முயலும் தரப்புகள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் விசமத்தனமாக செய்திகளை ஒலிபரப்பும் கீழ்நிலைக்கு இறங்கி யுள்ளமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தங்கள் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவிக்க விரும்பு கின்றனர்.

இந்தளவு பாரிய அனர்த்தம் நிகழ்ந்திருக்கும் வேளையில் மக் கள் மனதில் குழப்பத்தை ஏற் படுத்தும் விதமான வதந்தி களைப் பரப்பும் பணியில் அர சின் பொறுப்பு வாய்ந்த ஊடக மொன்று ஈடுபடுவது வருந்தத்தக் கது.

ஏற்பட்டிருக்கும் துன்பியல் நிகழ்வால் மக்கள் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் சூழ்நிலையிலும் முன்னெடுக்கப் பட்டுவரும் மனிதாபிமான நட வடிக்கைகளின் பின்னணியிலும் செய்தி வெளியிடுவதில், உண் மைத் தன்மை மாத்திரமன்றி கவனம், கட்டுப்பாடு மற்றும் ஊடக தர்மம் என்பவற்றை பேணுவது அவசியமானது.

ஒரு தேசிய அனர்த்தத்தின் காரணமாக மக்கள் அவல நிலையில் இருக்கும் பொழுது அவர்கள் மத்தியில் பதற்றமும் குழப்பமும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்யும் விதத்தில் தனது ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுவதை உறுதி செய்யும் தார்மீகக் கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு.

வதந்திகளைப் பரப்புவதற்கும் விசமத்தனமாக பிரசாரங்களை மேற்கொள்வதற்குமான நேரம் இதுவல்ல. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (04)

## யாழ். மாவட்ட...

என்பதாலேயே பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை தொடர்பாக கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத் தப்பட்டுள்ளது. இதனால் பெரும் பாலும் யாழ். மாவட்டப் பாடசா லைகள் நாளை ஆரம்பமாவதில் தாமதம் ஏற்படலாம் எனத்தெரிய வருகிறது. (இ)

## இலங்கைக்கான...

மனிதாபிமான ரீதியில் மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்துக் கொள்ளவே வந்தேன் எனவே சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட அனைவரையும் சந்தித்து அவர்களின் துன்பதுயரங்களில் பங்குகொள்ள விரும்புகிறேன் பாதிக் கப்பட்ட மக்கள் தொடர்பாக நான் மிகவும் அனுதாபமும் அக்கறை யும் கொண்டுள்ளேன் அவர்களின் உணர்வுகளை நான் மதிக்கிறேன்.

இலங்கை அரசாங்கத்தின் விருந் தாளியாக வருகை தந்துள்ள நான் அரசாங்கம் எடுக்கின்ற தீர்மானங் களுக்கும் அவர்களின் நிகழ்ச்சி நிர லுக்கு அமையவே செயற்பட முடி யும் என்றும் கோபி அனான் கூறினார்.

இதேவேளை கோபி அனான் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டு கடல் அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளையும் மக்களை யும் பார்வையிட விருப்பம் கொண் டிருந்தார் என்றும் அதனை அர சின் பேரினவாத சக்திகளே திட்ட மிட்ட வகையில் தடுத்துள்ளது என் றும் தெரியவருகிறது. (இ-4)

## நியமனக்...

யங்களுக்குரிய நியமனக்கடி தங்களையும் அந்தந்த அலுவல கங்களிலும் நாளை பெற முடியு மென தமிழீழ கல்விக் கழகம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரி களின் பெயர் விபரமும் அவர்கள் நியமனக் கடிதம் பெறவேண்டிய வலயக்கல்வி அலுவலகங்கள் பற்றிய விபரம் 3 பக்கத்தில் உள் ளன. (த)

## யெகோவாவின் விசேட மாநாடு

'நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்' எனும் பொருளில் யெகோவாவின் சாட் சிகளின் விசேஷ மாநாடு இன்று முற்பகல் 9.40 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம் பமாகி நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.55 மணிக்கு 'கட வுளுடைய அறிவுரைக்கு தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (இ)

## யாழ்ப்பாணத்தில் நலன்புரி...

சரியான மதிப்பீட்டை மேற்கொள் வது.

➩ஒழுங்குபடுத்தப்பட்ட அடிப் படையில் நிவாரண விநியோகத் தில் ஈடுபடுவது,

➩நலன்புரி நிலையங்களுக்கு நிவாரணப் பொருட்களை விநி யோகிக்கும்போது நலன்புரி நிலை யத்திற்குப் பொறுப்பான அப்பகுதி கிராம உத்தியோகத்தரிடம் அவற் றினை ஒப்படைத்து, அவரின் ஊடாக நலன்புரிநிலைய நிவாரண விநியோகக்குழு மக்களுக்கு அவற்றை வழங்குவது.

➩தொழில் ரீதியாகப் பாதிக் கப்பட்டவர்களது விபரத்தை கோவைப்படுத்தல்.

➩ஏற்கனவே அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களைத் துரித மாக மக்களுக்கு விநியோகித்தல்.

➩கல்வி, சுகாதாரம் போன்ற துறைசார்ந்த ரீதியில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்தல். அவற்றுக்குப் பொறுப்பாக சம்பந் தப்பட்ட துறைசார்ந்தவர்களை நியமித்தல்.

➩மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரி நிலையம் அமைப்பது.

➩அனர்த்தப் பாதிப்பு இடபா டுகளை அகற்றுவது.

➩வீதி அபிவிருத்தி போன்ற விடயங்கள் விரி வாக ஆராயப்பட்டன.

மேலும் இனிமேல் நடைபெற விருக்கும் நிவாரண வழங்கலுக்கு நலன்புரி நிலையங்கள் மற்றும் நண்பர் உறவினர் வீடுகளில் வசிப் போரின் விபரங்களை சேகரிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

பாடசாலைகளை முதலாம் தவணைக்காக திறப்பது குறித்து ஆராயப்பட்டபோதும் தெளிவான முடிவு எதுவும் கூட்டத்தில் எடுக் கப்படவில்லை.

இக்கூட்டத்தில் யாழ். மாவட் ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோன், யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் விஜிதரன், கூட்ட மைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, சுனாமி அனர்த்த கருமபீடத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட் டப் பிரதேச செயலர்கள், திணைக் களத் தலைவர்கள், மீனவர் கூட் டுறவுச் சமாசத் தலைவர் செய லாளர், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், துறைசார் பொறியி யலாளர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண் டனர். (இ-5)


நிறைஞ்சனாஸ் (சங்கானை)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே)




வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)
AIR FORCE I

ராஜா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், சினேகா, வடிவேல் நடித்த
வசீகரா
கா.நேரம் 10.30,2.30,6.30, 9.30 (பி.நே)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் குதூகல ஆரம்பம்



காட்சிநேரம் 10.30,2.30, 6.30, 9.30 (பி.நே)


# நலன்புரி முகாம்களுக்குப்...

ஒன்றிணைந்து திறமையான முறையில் 'நலன்புரி நிலையங் களை நிர்வகித்து வருகின்றனர்.

அரசாங்கம் குடாநாட்டுக்கு மக்களுக்கு வழங்கிய உதவி கள் பற்றி நாங்கள் போதிய தக வல்களைப் பெறவில்லை. அரச பிரதிநிதிகள் எவரையும் யாழ்ப் பாணத்தில் நேற்று நாங்கள் சந் திக்கவில்லை.

இராணுவத்திடம் நலன்புரி முகாம்களின் பொறுப்பை வழங் கியது பற்றி நாங்கள் அதிர்ச்சி யடைந்தோம். இத் திட்டம் இடை நிறுத்தப்பட்டதாக நாங்கள் தற் போது அறிகிறோம். அத்துடன் நாங்கள் இராணுவத் தரப்பினரை யும் சந்திக்கவில்லை.

வடகிழக்கில் இயல்பு வாழ்வை ஏற்படுத்தும் திட்டங்கள் எவை யும் அரசிடம் இல்லை. தென் னிலங்கையிலும் இதே நிலைதான் உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ள தாக அறிவித்துள்ளது. இதில் ரூபா ஒரு லட்சம் முதல் 15 லட்சம் வரை 6 வீத வட்டியுடன் கடன் வழங்கவும் தீர்மானித்துள் ளது. இந்த வட்டி வீதம் பாதிக் கப்பட்ட மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்துவதாகவே அமையும். குறைந்த வட்டி வீதத் தில் அதாவது ஒரு வீத அல்லது 2 வீத வட்டியுடன் கடனை வழங் கலாம்.

மேலும் கடற்கரையிலிருந்து குறிப்பிட்டளவு தூரத்திற்கு அப் பால்தான் வீடுகள் கட்ட முடி யும் என அரசு அறிவித்துள்ளது. தென்னிலங்கையிலும் இதே நிலைமைதான் உள்ளது. இத னால் அப் பிரதேசங்களில் வசித்த மக்களின் நிலை என்ன? அவர் களிற்கு பொருத்தமான காணி கள் வழங்கப்படுமா? என்பது பெரும் சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது.

இதேவேளை 2005 முதல் அர சியல் முரண்பாடுகளை மறந்து அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் ஒன் றிணைந்து புனரமைப்பு அபிவி ருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அரசு முன்வரவேண்டும். நலன் புரி முகாம்களின் நிவாரணப் பணிக்கு பொறுப்பாக இராணுவத் தினரை ஜனாதிபதி நியமித்திருக் கிறார். இது பாரிய தவறான அநீ தியை அரசு இழைக்கிறது என் பதைக் காட்டுகிறது. இராணுவத் திற்கு மொழிப் பிரச்சினை ஏற் படுவது மட்டுமல்ல. கடந்த 20 வருட காலமாக யுத்தம் நடை பெற்ற பகுதிகளில் இராணுவத் தினரை நிவாரணப் பணிக்குப் பொறுப்பாக நியமிப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான வெளிநாட்டு உதவிகளை நேரடி யாக கிளிநொச்சிக்கு கொண்டு செல்லவிடாது தடுத்தாலும் யதார்த்த நிலை அதுவல்ல.

குறிப்பாக இத்தாலி நாட்டுப் தூதுவர் நேரடியாக கிளிநொச் சிக்குச் சென்று விடுதலைப் புலி களின் அந் நாட்டு அரசின் உதவிகளை வழங்கியிருக்கிறார் என்றும் வாசுதேச நாணயக்கார கூறினார்.

இப் பத்திரிகையாளர் மாநாட் டில் இன வேறுபாடுகளுக்கெதி ரான சர்வதேச அமைப்பின் இம டாவின் இலங்கைப் பிரதிநிதி நிமால்கா பெர்னான்டோ கருத்து தெரிவிக்கையில், கடல் அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கான உதவிகளை தொண் டர் அமைப்புக்களாலும் சிவில் அமைப்புக்களாலும்தான் உட னடியாக வழங்க முடியும். இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடிய மர்வு என்பது அந்த மக்களின் உடன்பாட்டுடனேயே மேற்கொள் ளப்படவேண்டும் என்பது சர்வ தேச விதி.

அதேபோன்று கடற்கரையில் இருந்து குறிப்பிட்டளவு தூரத்திற்கு குடியிருப்புக்களை பின்நகர்த்த வேண்டும் என்பது அந்த மக் களின் உடன்பாட்டுடனேயே செய் யப்படவேண்டும். மேலும் நலன் புரி முகாம்களில் பெண்கள் முகாமைத்துவப் பணிகளில் முன் னின்று தாராளமாக செயற்பட்டு வருவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

நலன்புரி நிலையங்களில் உள்ள பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் பாதுகாப்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். நலன் புரி நிலையங்களில் இராணுவத் தினரை பணியில் ஈடுபடுத்தக் கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தப் பட்டால் ஆர்ப்பாட்டம் நடத்தியே னும் அதனை வாபஸ் பெறவைக் கவேண்டும்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஐ.நா. செயலாளர் பார்வையிட்டு வருகிறார். அவர் வடபகுதிக்கு வருவது தொடர்பில் அது பெரும் தவறாகவே இருக்கும். குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யான குடாநாட்டுக்கு வராது சென்றால் ஐ.நா. அமைப்பின் ஓர் அங்கமாக இயங்கும் எமது இமடா அமைப்பின் மூலம் கேள் விக்குட்படுத்துவோம். அப்படி இங்கு வருகைதராவிட்டால் அரசு எப்படி வடக்குக் கிழக்கை நோக் குகிறது என்பது தெட்டத் தெளி வாக புலனாகும் என்றார்.

இப் பத்திரிகையாளர் மாநாட் டில் ஐக்கிய சோசலிசக் கட்சி உறுப்பினர் சிறிதுங்க ஜயசூரிய, சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் அனந்த தேசப்பிரிய யாழ். பல்கலைக் கழக பேராசி ரியர் சிவச்சந்திரன் மற்றும் தென் னிலங்கை ஊடகவியலாளர் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை வாசுதேச நாண யக்கார குழுவினர் இன்று கிளி நொச்சிக்கு செல்கின்றனர். (த-05)


அனைவருக்கும் நன்றிகள்
DMI Jaffna
நிர்வாகம்
(C/954)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.